₹10

fmpb

# அறைகூவல்

Volume 54 | Issue 9 | September 2024

*“ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்கு தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான்.” அப். 11:17*

## சுத்திகரிக்கும்
# ஆவியானவர்



**நான் எம்மாத்திரம்**
2 சாமுவேல் 7:18

## ஆவியானவரின் கிரியைகளைத் தடுப்பதற்கு நான் எம்மாத்திரம்?



# ஆரம்ப வரிகள்...

என்னைக் குறித்து தேவனுடைய திட்டம் என்னவாயிருக்கும்! தேவனுடைய திட்டத்தை என் வாழ்வில் நிறைவேற்ற விரும்பும் எனக்கு ஏன் இத்தனை தடைகள்! தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற எனக்கு யாராவது உதவி செய்யமாட்டார்களா? என்று பலவாறு நினைப்பவர்களா நீங்கள்! பழைய ஏற்பாட்டு கால துவக்கத்திலிருந்தே தூய ஆவியானவர் தன் திட்டத்தை நிறைவேற்றிட தனி மனிதர்களை தலைவர்களாகவும், தீர்க்கதரிசிகளாகவும் மற்றும் நியாயாதிபதிகளாகவும் தேர்ந்தெடுத்து அவர்கள் மேல் இறங்கி தன் கிரியைகளை நடப்பித்ததை (எண். 11:17,25, 27:18, நியா. 15:14, 1சாமு. 16:13,14, 10:6,10, ஆதி. 41:38) காண்கிறோம். புதிய ஏற்பாட்டு காலத்திலும் மரியாள், ஸ்தேவான், பவுல், பேதுரு போன்றோரோடு பரிசுத்தாவியானவர் இடைபட்டதையும் வாசிக்கிறோம். ஆவியானவர் ஒருவரோடு தங்கியிருக்கும் போது மட்டுமே அவர்களால் பலத்த காரியங்களை செய்யமுடியும். இயேசு கிறிஸ்துவானவர் வாக்குப்பண்ணினபடியே (லூக். 24:49) நம்மோடிருந்து நம்மைத் தேற்றவும், தைரியப்படுத்தவும், சகல சத்தியத்திற்குள் நம்மை நடத்தவும், பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தவும் பரிசுத்தாவியானவரை அனுப்பினார் (யோ. 16:7-8). ஆனால் ஆதியிலிருந்தே தேவனின் திட்டத்தைத் தடுப்பதற்கு சாத்தான் அநேகரை பயன்படுத்தியதையும், தேவ பிள்ளைகள் ஆவியானவரின் பெலத்தோடு மேற்கொண்டு தேவ திட்டத்தை நிறைவேற்றி முடித்ததையும் பார்க்கிறோம்.

தேவ திட்டத்தை நிறைவேற்றவிடாமல் கொலை செய்ய எத்தனித்த ஏரோதிடமிருந்து தேவன் மோசேயை பாதுகாத்து **இஸ்ரவேல் ஜனத்திற்கு** தலைவனாக ஏற்படுத்தினார். யோசேப்பின் வாழ்விலும் தேவ திட்டத்தை நிறைவேற்ற விடாமல், சொந்த சகோதரர்கள் மூலம் வந்த தடைகளை நீக்கி அவனை **தேசங்களுக்கு** ஆசீர்வாதமாக தேவன் மாற்றினார். தாவீது பாவம் செய்த போது ஆவியானவர் அவரை கண்டித்து, உணர்த்தி, சீர்படுத்தி, உலக இரட்சகரை அவரது சந்ததியில் பெற்றெடுக்கும் பாக்கியத்தை அருளினார். இவ்வுலகில் இயேசு கிறிஸ்துவும் தேவ திட்டத்தை நிறைவேற்றிட தடையாய் இருந்த சாத்தானின் கிரியைகளை பரிசுத்த ஆவியானவரின் பெலத்தாலே மேற்கொண்டு **முழு உலகத்திற்கும்** ஆசீர்வாதமாக மாறினார்.

இன்று நமது பணித்தளங்களில் எதிர்ப்புகளும், தடைகளும் எப்போதும் இருந்து கொண்டேதான் இருக்கிறது. தேவ திட்டத்தைத் தடுப்பவர்கள் சாத்தானால் இயக்கப்படும் கருவிகளாகும். எனவே நம்மை எதிர்க்கும் எந்த தனி நபர்களையும் வெறுக்காமல் அவர்களுக்காய் ஜெபிக்கும் போது ஆவியானவர் நம்மை வெற்றியின் பாதையில் நடத்துவார். அவ்வாறு நம் பணித்தளங்களிலும் வரும் எல்லா எதிர்ப்புகளையும், தடைகளையும் மேற்கொள்ள யுத்தகளத்திலுள்ள நமது ஊழியர்களை தேவன் பெலப்படுத்தும்படி அனுதினமும் அவர்களுக்காக ஜெபிப்பது நமது கடமை.

சுத்திகரிக்கப்படாத பாத்திரங்கள் எதுவும் தேவ கரங்களில் பயன்பட முடியாது. மென்மையான தூய ஆவியானவரின் கரங்களில் நம்மை சுத்திகரிக்க ஒப்புக்கொடுக்கும் போது மட்டுமே தேவ திட்டத்தை நம்முடைய வாழ்விலும், தேசத்திலும் நிறைவேற்ற முடியும். **சுத்திகரியும் தூய ஆவியானவரே, என்னை சுத்தப்படுத்தும் உம் தூய கரத்தினால்** என்று ஒப்புக்கொடுப்போம். நம் தேசத்தை சுதந்தரிப்போம்.

- **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

“என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.” *யோவான் 14:26*

**பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டுமெனில் சுயத்தை வெறுமையாக்க வேண்டும்.**

“பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினலும் உங்களை நிரப்புவாராக.” *ரோமர் 15:13*

**பாவ மன்னிப்பை பெற்றதில் மட்டும் திருப்திக்கொள்ளக் கூடாது; பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் அவசியம்.**
*ஜாண் ஃபிளெட்சர்*

**லகுவான காரியங்களை செய்து முடிப்பதற்கல்ல; மாறாக நம்மால் கூடாத காரியங்களை செய்து முடிக்கவே ஆவியானவரால் நிரப்பப்படவேண்டும்.**
*ஜாய்ஸ் மேயர்*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

**நமது தரிசனம்**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


# அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*



# பொதுச்செயலாளரிடமிருந்து...

சந்திக்கப்படாத மக்களை சந்திக்கும் இயக்கத்தின் அன்பு பங்காளர்களே!

உத்தரப்பிரதேசத்தின் திவ்யாபூர் பணித் தளத்தை பார்வையிடச் சென்றிருந்த நான் இரவில் என் அலை பேசியில் மணி 1:32 என்று காட்டியபோது அறைகூவலுக்காக என் தலையங்கத்தை எழுதத் துவங்கினேன். காலையிலிருந்து 4 பணித்தளங்களைப் பார்வையிடவும், மிஷனெரி குடும்பங்களை சந்திக்கவும் தேவன் கிருபை செய்தார். பிரயாணம் மிகவும் களைப்பாக இருந்தாலும், ஊழியர்களுடனான உரையாடல் மிகவும் புத்துணர்ச்சியையும், ஊக்கத்தையும் அளித்தது.

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5-ம் தேதி, நம் வாழ்க்கையை வடிவமைத்ததில் முக்கியப் பங்காற்றிய ஆசிரியர்களை நினைவு கூறுகிறோம். நம் இயக்கத்தின் முன்னோடி தலைவர்களில் அநேகர் ஆசிரியர் பணிசெய்து கொண்டே தேவனின் தரிசனத்தை தமிழ் நாட்டின் பல இடங்களுக்கும் எடுத்துச் சென்றனர். இப்படிப்பட்ட தலைவர்களால் இளம் உள்ளங்கள் தேவனோடுள்ள உறவில் உரமேற்றப்பட்டு தேவனுடைய சுவிசேஷத்தை இந்தியாவின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் சென்றனர். ஆவிக்குரிய மறுமலர்ச்சியை அருளி தேசத்தைக் கட்டி எழுப்புவதில் மகத்தான பங்களிப்பை அருளிய இப்படிப்பட்ட ஆசிரியர்களை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு வாழ்த்துகிறது. “பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்” நீதி. 22:6.

### விடுமுறை வேதாகமப் பள்ளி (VBS) இயக்குநருடன் சந்திப்பு:

பெங்களூரிலுள்ள VBS ஊழியத்தின் இயக்குநர் நமது அலுவலகத்திற்கு வந்து, நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு அவர்களுடைய விடுமுறை வேதாகமப் பள்ளி பாடத் திட்டத்தை நாம் பயன் படுத்தும் வாய்ப்புகளைக் குறித்து கலந்துரையாடினார்கள்.

### இந்திய மிஷனெரி சங்க (IMS) தலைவர்களுடன் சந்திப்பு:

IMS இயக்கத்தின் தலைவர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 12 பேராக நமது தலைமை செயலகத்தைப் பார்வை யிட்டதுடன் நம் இயக்கத்தின் கட்டமைப்பு களைக் குறித்து கலந்துரையாடினர். இது ஒரு ஆசீர்வாதமான சந்திப்பாக அமைந்தது.

### ஊழியர்களின் பட்டமளிப்பு விழா:

2024 ஜூலை 29-ம் தேதி ஊழியப் பயிற்சி முடித்த 10 மிஷனெரிகளுக்கு பட்டமளிப்பு விழா ஜான்சியிலுள்ள NIM வளாகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இவ்விழாவிற்கு பல திருச்சபைகளைச் சார்ந்த தலைவர்கள், நம் இயக்கத்தின் தலைவர்கள் மற்றும் விசுவாசிகள் வருகை தந்தனர். இம்மிஷனெரிகள் சென்றுள்ள பணித்தளங்களில் தேவன் அவர்களை

வல்லமையாய் பயன்படுத்த ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### புதிய மிஷனெரிகளுக்கான கலாச்சாரம் கடந்த தொடர்பு பயிற்சி:

ஜான்சியிலுள்ள மிஷனெரி பயிற்சி மையத்தில் புதிய மிஷனெரிகளுக்கு கலாச்சாரம் கடந்த தொடர்பு பாடத்தை கற்பித்தேன். மேலும் அவர்களுடன் நம் இயக்கத்தின் பல்வேறு ஊழியங்களைக் குறித்தும், நெறிமுறைகளைக் குறித்தும் கலந்தாட போதுமான நேரமும், வாய்ப்பும் கிடைக்கப் பெற்றேன்.

### இந்திய இயக்கங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளின் கூடுகை – மதுரை:

மதுரையில் நான்கு நாட்கள் இந்திய இயக்கங்களின் தலைமை நிர்வாக அதி காரிகளின் கூடுகை நடைபெற்றது. இந்த கூடுகையில் இன்றைய சூழ்நிலையில் தேசத்தை சுவிசேஷ மயமாக்கும் பணியில் சந்திக்கும் சவால்களைக் குறித்து இயக்கங்களின் தலைவர்களாக கலந்தாலோசித்தோம்.

### சுகவீனப்பட்டுள்ள ஊழியர்களுடன் சந்திப்பு:

வேலூரிலுள்ள சி.எம்.சி. மருத்துவ மனையில் தொடர் சிகிச்சைப் பெற்று வரும் ஊழியர்களை சந்தித்தேன். நோயுற்ற மிஷனெரிகளுக்காக தொடர்ந்து ஜெபிக்கும் படி உங்களை வேண்டிக்கொள்கிறேன். சிலர் புற்றநோய் போன்ற கொடிய நோய்களால் பாதிக்கப் பட்டு, சிகிச்சைப் பெற்றும் குணமடையாமல் இருக்கும் நிலையில் தேவனுடைய அற்புத தொடுதலுக்காக ஜெபிப்போம்.

### FMPB US காலாண்டு கூட்டம்:

காணொலி மூலம் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமெரிக்காவில் வாழும் இந்திய ஜெபக்குழுத் தலைவர்கள் 14 பேர் கலந்து கொண்டனர். தற்போது நடைபெற்று வரும் திட்டங்களை குறித்தும், இனி துவங்கப்படவேண்டிய திட்டங்களை குறித்தும் திட்டமிட்டோம்.

### கான்பூர் பிராந்திய பணித்தள சந்திப்பு:

கான்பூர் பிராந்தியத்தில் பணி செய்யும் நம் மிஷனெரிகளை அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று சந்தித்தோம். உத்தரப்பிரதேசத்தில் நமது மிஷனெரிகள் ஊழியத்தில் கடும் சவால்களை சந்தித்து வருகின்றனர். எதிர்ப்பின் மத்தியிலும் உற்சாகத்துடன் ஊழியம் செய்து வருகிறார்கள். ஊழியத்தின் வளர்ச்சிக்காக சில புதிய வழிமுறைகளையும், மாற்று வழிகளையும் அடையாளம் கண்டு அவைகளை குறித்து மிஷனெரிகளுடன் கலந்தாலோசித்தோம்.

### ஓய்வு பெற்ற மிஷனெரிகள் மற்றும் கோண்டா விடுதி பணியாளருடன் சந்திப்பு:

கான்பூர் பிராந்திய சந்திப்பில் வட இந்தியா வின் முதல் பணித்தளமான பஸ்தியை பார்வையிடும் வாய்ப்பைப் பெற்றேன். இந்தி மொழி பயிற்சிக்கு பின் 1989-ல் ஜீப் குழு ஊழியம் செய்த எனக்கு இதுவே முதல் பணித்தளம். பஸ்தியில் வசிக்கும் ஓய்வு பெற்ற நமது முன்னோடி மிஷனெரி அருள்திரு. பீட்டர் ஹரிராம் அவர்கள் குடும்பத்தை சந்தித்தது மகிழ்ச்சி அளித்தது. கோண்டா விடுதியில் பல ஆண்டுகளாக தன்னார்வ ஊழியராக பணிசெய்யும் திரு. சுந்தரையும் சந்தித்தேன். 1988-ல் முதன்முறையாக நான் அவரை சந்தித்தேன். இப்படிப்பட்ட உண்மையுள்ள ஊழியர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன்.

**செப்டம்பர் மாத ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்**

### குருத்துவ பட்டமளிப்பு விழா:

தேவனுடைய கிருபையால் வடஇந்திய திருச்சபைகளின் குஜராத் பேராயர் அவர்கள் நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு செப்டம்பர் 2-ம் தேதி குருத்துவ பட்டம் அளிக்க முன்வந்துள்ளார்கள். வடக்கு சுவிசேஷ லூத்தரன் திருச்சபையின் (NELC) பிரதம பேராயர் அவர்களும், டிசம்பர் 8-ம் தேதி ஜார்கண்ட்டில் வைத்து நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு குருத்துவ பட்டமளிக்க முன்வந்துள்ளார்கள். இப்படிப்பட்ட திருச் சபை தலைவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

### சத்தீஸ்கட் பணித்தள விஜயம்:

கர்த்தருக்குச் சித்தமானால் செப்டம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் சத்தீஸ்கட் பிராந்திய மிஷனெரிகளை சந்திக்க திட்டமிட்டுள்ளேன்.

### அஸ்ஸாம் சந்திப்பு:

மூன்று நாட்கள் பயணமாக செப்டம்பர் 2-ம் வாரத்தின் இறுதியில் அஸ்ஸாமி லுள்ள நமது இயக்க ஆதரவாளர்களை சந்திக்கவும், போடோ பாப்டிஸ்ட் சர்ச் அசோசியேஷன் உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் அஸ்ஸாம் செல்லவிருக்கிறேன்.

### செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம்:

செப்டம்பர் 21-ம் தேதி செயற்குழு கூட்டமும், 22-ம் தேதி பொதுக்குழு கூட்டமும் நடைபெறவுள்ளது. இந்த இரண்டு முக்கியமான கூட்டங்களுக்காக ஊக்கமாக ஜெபியுங்கள்.

### துறைச் செயலாளர்கள் கூட்டம்:

செப்டம்பர் 24 முதல் 27 வரை துறைச் செயலாளர்களுடன் உபவாச ஜெபம் மற்றும் திட்டக்கூடுகை நடைபெறவுள்ளது.

### ஊழியர்களின் உயர் கல்வி குழு:

செப்டம்பர் 28-ம் தேதி மிஷனெரிகளின் உயர் கல்விக்காக பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை குறித்து இக்குழு முடிவெடுக்க உள்ளது.

### தேடல் குழுக்கள்:

இம்மாபெரும் இயக்கத்தின் புதிய தலைவர், உப தலைவர், புதிய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் 50 புதிய பொதுக்குழு உறுப்பினர்களை கர்த்தர் தந்தருள அவரின் பாதத்தில் இயக்கமாக காத்திருக்கிறோம். இயக்க நிர்வாகிகளை தேர்வு செய்ய அதற்கென அமைக்கப்பட்ட குழுக்கள் ஜெபத்தோடு செயல்பட்டு வருகின்றனர். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரங்கள், இவ்வியக்கத்தின் தரிசனத்தை நிறை வேற்றிட பயணிக்கும் பயணத்தில் தங்கள் பொறுப்புகளில் நியமிக்கப்படும்வரைக்கும் தொடர்ந்து கருத்தாய் ஜெபிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்கி ஆதரித்து வரும் உங்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். உங்களை எங்கள் ஜெபங்களில் நினைவு கூறு கிறோம். உங்கள் ஜெபம் சுவிசேஷம் அறியாத இந்தியர்கள் இரட்சிக்கப்பட உதவியாக இருக்கும். தேவன் உங்கள் அனைவரோடும் கூட இருப்பாராக!

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

# அனைத்து மனுக்குலத்திற்கும் தேவனின் இரட்சிப்பு



*"ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்கு தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான்." அப். 11:17*

அப்போஸ்தலனாகிய பேதுரு செசரியா பட்டணத்தில் கொர்நேலியு என்பவர் வீட்டில் கூடியிருந்த ஜனங்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவித்ததை கேள்விப்பட்ட எருசலேமிலுள்ள யூத கிறிஸ்தவர்களும், அப்போஸ்தலர்களும் விருத்தசேதனம் இல்லாதவர்களுடன் பேதுருவின் அணுகு முறையைக் குறித்து வாக்குவாதம் செய்தனர் (அப்.11:1-3). அதற்கு பேதுரு, தேவன் தனக்கு அருளின தரிசனத்தையும் சுவிசேஷத்தைக் கேட்டுக்கொண்டிருந்த புறஜாதியார் மேல் பரிசுத்தாவியானவர் பொழிந்தருளப்பட்டதையும், அவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றதையும் அவர்களுக்கு விவரிக்கையில் கேட்டவர்கள் எதிர் பேச இயலாமல் தேவனை மகிமைப்படுத்தினார்கள் (வ.18). அதன் பின் அவர்கள் தங்கள் மனநிலையில் மாற்றம் கொண்டு புறஜாதியார் மத்தியில் தேவனின் இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற தங்களையும் அர்ப்பணித்ததினால் பல தேசங்களுக்கும் சுவிசேஷம் வேகமாய் பரவியதை அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் பார்க்கிறோம்.

## தேவ திட்டம் நிறைவேற தடைகள் தகர்க்கப்பட வேண்டும்

ஜார்கண்ட் மாநிலத்தில் நமது முன்னோடி மிஷனெரிகள் மால்தோ இனமக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்த நாட்களில், மால்தோ இன மக்களின் வாழ்வில் மாற்றத்தைக் கண்ட சில சந்தால் இன மக்கள் தாங்களும் ஞானஸ்நானம் பெற வாஞ்சைக் காட்டிய போது, ஆரம்பத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க மிஷனெரிகள் தயங்கினார்கள். ஏனெனில் மால்தோ இன மக்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதே அவர்களது நோக்கமாயிருந்தது. ஆனால் பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதலுக்கு கீழ்படிந்து தேவனுடைய திட்டத்தை புரிந்து கொண்டபின்னர் நமது மிஷனெரிகள் சந்தால் இன மக்களுக்கும் சுவிசேஷம் அறிவித்து ஞானஸ்நானம் கொடுத்தனர். தேவன் அவர்கள் மத்தியில் மகத்தான காரியங்களை நடப்பித்ததினால் இன்று சுமார் 1.20இலட்சத்திற்கும் மேலான சந்தால் இன மக்கள் தேவனண்டை திரும்பியுள்ளனர்.

சுத்தமான மற்றும் அசுத்தமான பிராணிகள் பற்றிய தரிசனம் பேதுருவுக்கு ஆழமான அர்த்தத்தை உணர்த்தியது. யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் இடையே பெரிய இடைவெளி இருந்த அந்நாட்களில்

பரிசுத்தாவியானவர் அனைவரின் மேலும் இறங்கியதினிமித்தம் தடைகள் நீக்கப்பட்டது. பரிசுத்தாவியானவரின் உன்னத திட்டத்தை எதிர்ப்பதற்கு/தடுப்பதற்கு நாம் யார்? கொர்நேலியு வீட்டில் கூடி வந்தவர்கள் பரிசுத்தாவியால் நிரப்பப்படவும், ஞானஸ்நானம் பெறவும் அதினால் உண்டான கிறிஸ்தவ ஐக்கியத்தை யாராலும் தடைசெய்ய இயலாது. ஏனெனில் இது ஆவியானவரின் நடத்துதல் என புரிந்து கொண்ட அப்போஸ்தலர்கள் புறஜாதிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்க தங்கள் மிஷனெரி பயணத்தை மேற்கொண்டனர். அவர்கள் அன்று தங்கள் பழைய கண்ணோட்டத்திலிருந்து திரும்பியதால் இன்று உலகம் முழுவதும் சுவிசேஷம் சென்றடைய வழிவகுத்தது.

## தேவ திட்டம் நிறைவேற கீழ்ப்படிதல் வேண்டும்

அநேக ஆண்டுகளாக அடிமைத்தன வாழ்க்கை மற்றும் மதத் தலைவர்களின் ஒடுக்குதல் யூதர்களின் மனநிலையில் பல மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. தங்கள் சொந்த தேசத்தில் குடிபெயர்ந்தப்பின் புறஜாதியாரின் வழிபாடுகளை விட்டு விலகிய யூதர்கள் மோசேயின் நியாயப்பிரமான புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி தேவனின் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்ததையும் மேலும் தங்களது பாரம்பரியம் மற்றும் கலாச்சார நடைமுறைகளை கண்டிப்பாய் பின்பற்றியதையும் வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

பேதுரு, கொர்நேலியு என்ற நூற்றுக்கு அதிபதியின் வீட்டில் கூடியிருந்த விருத்தசேதனமில்லாத ஜனங்களுடன் போஜனம் பண்ணினார் என விருத்த சேதனமுள்ள யூத விசுவாசிகள் பேதுருவின் மீது மனஸ்தாபம் கொள்கையில் அவர் தனது செயலை நியாயப்படுத்தினார். பேதுரு தேவனுடைய வார்த்தைகளை அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கும் போதே வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் மேல் பரிசுத்தாவியானவர் இறங்கியதால் அவர்கள் பற்பல பாஷைகளைப் பேசினார்கள். இதில் தனக்கு எந்த பங்கும் இல்லை. எல்லாம் தூய ஆவியானவரின் நேரடி நடத்துதல், நான் தேவ தரிசனத்திற்கு கீழ்படிந்து வசனத்தை போதித்தேன் அவ்வளவே என்று அவர்களுக்கு விளக்குகிறார்.

நாம் சிலருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் நமக்கு பாரத்தைக் கொடுப்பாரானால் அதைக் கேட்போரின் உள்ளத்தையும் தேவன் ஆயத்தப்படுத்தி வைத்திருப்பார். பரிசுத்தாவியானவர் அவர்களில் கிரியை நடப்பிப்பார். நமது பணித்தளங்களில் பல வேளைகளில் ஊழியத்தை கடினமாய் எதிர்த்தவர்கள் கூட பின் நாட்களில் மனந்திரும்பியதைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறோம். நமது கடமை என்னவெனில் ஆவியானவர் தம் கிரியைகளை நடப்பிக்க பேதுருவைப்போல் நாம் கீழ்படிந்து, செயல்படும்போது அதனால் வரும் பலன் மகத்துவமாய் இருக்கும். பிரசங்கி 11:1–ல் கூறப்பட்டதுபோல உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்.

## தேவ திட்டம் நிறைவேற தேவனது பாரத்தை பகிர்ந்துகொள்ள வேண்டும்

தேவன் ஒரு தனிப்பட்ட மக்கள் கூட்டத்தின் மேல் அல்லது தேசத்தின் மேல் பாரபட்சமாய் இருப்பதில்லை. “தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும் எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியை செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்” அப். 10:34-35.அன்று தேவன் புறஜாதி யாரையும் இரட்சிக்க திட்டம் வைத்துள்ளார் என்று உணரும்படி யூத விசுவாசிகள் நிர்பந்திக்கப்பட்டார்கள். நம் தேசத்திலும் தேவனின் திட்டம் நிறைவேறும்படி நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலம் சுமார்

266-க்கும் அதிகமான இனமக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வருகிறது.

''அவனவன் பெற்ற வரத்தின் படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணகாரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்''. 1பேதுரு 4:10. நமது பணி, அழைப்பு எதுவாக இருந்தாலும் நாம் சுவிசேஷ நற்செய்தியை தேவையுள்ளோருக்கு பகிர்ந்தளிக்க கடமைப் பட்டுள்ளோம். ஒவ்வொரு நாளும் நாம் சந்திக்கும் நபர்களில் யாரேனும் தேவனை அறியாதவர்களாய் இருந்தால் அவர்கள் உள்ளமே நமது பணித்தளம். இயேசு கிறிஸ்துவை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதே நமது ஊழியம். "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு புத்தி சொல்லு" 2 தீமோ. 4:2. "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ'' 1கொரி. 9:16. ஆகிய வேத வசனங்கள் பிறருக்கு சுவிசேஷம் அறிவிக்க நம்மைத் தூண்டுகிறது.

## சுவிசேஷத்திற்கு நான் தடையாய் உள்ளேனா?

''...இடறல்கள் வராமல்போவது கூடாத காரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ அவனுக்கு ஐயோ! " லூக்.17:1. தேவனுடைய சுவிசேஷத்தை பிறருக்கு அறிவித்திட நமது மொழி, நிறம், ஜாதி, கலாச்சாரம் ஆகியவை தடையாய் உள்ளனவா? தேவன் நம்மை நடத்தும் விதத்தில் நாம் பிறரை நடத்துகிறோமா? தேவனின் அன்பு, இரக்கம், கிருபை மற்றும் மன்னிப்பு இவைகளை அனுதினமும் பெற்று அனுபவிக்கும் நாம் பிறருக்கு அவைகளை தாராளமாய்ப் பகிர்ந்து கொடுக்கிறோமா? கிறிஸ்தவர்களாகிய நாம் நமது/பிறரது ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்கு தடையாயிருக்கும் நமது தனிப்பட்ட பெருமைகளை தாண்டி முன்னேறிச் செல்லவேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம். நமக்குள் வாசம்பண்ணும் பரிசுத்தாவியானவரின் வல்லமையின்றி நம்மால் வெற்றிகரமாக தேவனுக்காய் எதுவும் சாதிக்க இயலாது. தேவன் நம்மிடம் ஒருபோதும் கடுமையாய் நடந்து கொள்வதில்லை. "ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்" ரோமர் 15:7. ஒருவரை குறித்தான நம்முடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், பழக்கவழக்கங்கள், அந்தஸ்து, சுயநீதி ஆகியவைகள் நம்மில் தடையாய் காணப்படுமாயின் பரிசுத்தாவியானவர் தனது கிரியைகளை நம்மூலம் நடப்பிக்க இயலாது. நம் வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் கிறிஸ்துவுடன் ஒப்பிட்டுப் பார்த்து நமது பேச்சு, நடத்தை, அணுகுமுறை ஆகியவை பிறருக்கு இடறலாக இருக்கிறதா என்று நாம் நம்மை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

பிரியமான தேவ பிள்ளைகளே! தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிப்பதோடு புதிய விசுவாசிகளும், விசுவாசத்தில் பெலவீனமாய் இருப்பவர்களும் தேவனில் வளர அல்லது அவர்களது விசுவாசத்தை கட்டி எழுப்ப நாம் தேவனது கரத்தில் பயனுள்ள கருவியாய் இருக்கவேண்டும். தேவனின் இரட்சிப்பின் திட்டம் நிறைவேற நாம் நம்மை முற்றிலும் அர்ப்பணிப்போம். முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை செய்யும் என்பதே நமது விசுவாசமும், ஜெபமுமாய் இருக்க தேவன் நமக்கு கிருபை செய்வாராக!

**அருள்திரு. டிங்க்யூ ஜெமி**
– மிஷனெரி, ஜார்கண்ட்

FMPB & நற்செய்தி தரிசன ஊழியங்கள் இணைந்து நடத்தும்

## வாலிபர் கூடுகை

நாள்: 07.09.2024, சனிக் கிழமை
காலை 10 மணி முதல் மாலை 4.00 மணி வரை
இடம்: தேவாலயம், தி சர்ச் ஆஃப் புதுக்கோட்டை,
தலைமை: **Pr. R. ஆரோக்கியம்,** Good News Vision Ministries.
செய்தியாளர்: **Bro. மோகனதாஸ்,** (E.U. புதுக்கோட்டை)
தொடர்புக்கு: 9597124875, 9842198101

## வாலிபர் கூடுகை - மதுரை

நாள்: 07.09.2024 சனிக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை
இடம்: நேரு பள்ளி, நரிமேடு, மதுரை.
செய்தியாளர்கள்:
**Rev. S. ரவிக்குமார்,** FMPB, சேலம் & **இளைஞர் பிரிவு,** சென்னை
தொடர்புக்கு: 9444663401, 7538805462

## அர்ப்பணித்தோர் முகாம்

நாள்: செப்டம்பர் 15 & 16 (ஞாயிறு & திங்கள்)
நேரம்: ஞாயிறு மாலை 4 மணி முதல் திங்கள் மாலை 4 மணி வரை
இடம்: FMPB, சிநேகாலயா, 14/1 கார்டன் தெரு,
செயின்ட் மேரிஸ் 1-வது குறுக்குத் தெரு, பெருமாள்புரம், திருநெல்வேலி - 7.
செய்தியாளர்கள்:
**Rev. D. பால் சாலமோன், Mr. நத்தானியேல் எட்வர்ட், Rev. G. கிங்ஸ்லி**
தொடர்புக்கு: 9445119789, 7598018774, 9445040148

## திருச்சி ஸ்கேன் குடும்ப கூடுகை - 2024

நாள்: 22.09.2024, ஞாயிறு மாலை 4.30 மணி முதல்
இடம்: அரிஸ்டோ L.K.S. மஹால், திண்டுக்கல் ரோடு,
மத்திய பேருந்து நிலையம் அருகில், திருச்சி.
செய்தியாளர்: **வழக்கறிஞர். திரு. தர்மராஜ்,** FMPB, Chennai.
பணித்தள பகிர்வு & கலாச்சார நிகழ்வுகள்: **திரு. சுனில் பிரசாத்சிங்** குழுவினர், அஸ்ஸாம்
தொடர்புக்கு: 9994918543, 9842410481, 8072070650

# பணித்தள விஜயம் & ஆலய பிரதிஷ்டை



தேவ கிருபையால் சென்னை அம்பத்தூரிலிருந்து 20 பேர் கொண்ட குழுவினர், 2024 ஜுன் 19 முதல் 24 வரை மத்திய பிரதேச FMPB பணித்தளங்களுக்கு சென்று, அங்கு விசுவாசிகளோடு தேவனை ஆராதித்தோம். 23.06.2024 ஞாயிறு, கார்கோன் பணித்தளத்தின் சிலோட்டியா கிராமத்தில் கட்டப்பட்ட புதிய ஆலயத்தை காண்டுவா பிராந்திய செயலர் மிஷனெரி Rev. ஐசக் அவர்கள் திரியேக தேவ நாமத்தில் பிரதிஷ்டை செய்தார்கள். இந்த ஆலயத்தை அம்பத்தூர் விரிவுப்பணி கௌரவ பிராந்திய செயலர் திரு. M. யோகராஜ் – திருமதி. பெரில் யோகராஜ் அவர்கள் தேவ நாம மகிமைக்காக கட்டிக் கொடுத்து, திறந்து வைத்தார்கள். தேவனிடத்தில் அற்புத சுகம் பெற்ற விசுவாசி திரு. ராமேஷ்வர் அவர்கள் இந்த ஆலயத்தை கட்ட 1/2 ஏக்கர் நிலத்தை கொடுத்திருந்தார்.

சிறப்பு ஆராதனையில் விசுவாசிகள் உற்சாகமாக பாடி தேவனை துதித்தார்கள். அநேக அற்புத சாட்சிகளை எங்கள் காதுகளால் கேட்டு, கண்களால் பார்க்க தேவன் கிருபை செய்தார். மனநலம் பாதிக்கப்பட்டு ஆடையின்றி அலைந்த மகேஷ் என்ற வாலிபன் ஜெபத்தால் சுகம் பெற்றான்; தண்ணீர் தொட்டிக்குள் விழுந்து மரித்த 3 வயது மகள் பியூலா ஜெபத்தால் உயிர் பெற்றாள்; 15 வருடங்கள் வியாதியுற்று, கடைசி 4 மாதங்கள் மயக்க நிலையிலிருந்த ஒருவர் ஜெபத்தால் சுகமடைந்தார்; பிறக்கும்போது, கால் முதுகில் ஒட்டி பிறந்த குழந்தை ஜெபத்தால் சுகம் பெற்றாள்; இன்னும் ஏராளமான சாட்சிகளைக் கேட்டு தேவனைத் துதித்தோம். மேலும் பல பணித்தளங்களை பார்வையிட்டு ஆத்தும பாரத்தோடு திரும்பி வந்தோம். தேவனுக்கே மகிமை!

**திரு. J. சாமுவேல்** – கௌரவ விரிவுப் பணி செயலர், அம்பத்தூர் வடக்கு.

# மகிமைக்குள் பிரவேசித்துள்ளார்



திண்டுக்கல் மாவட்டத்தின் கௌரவ முன்னேற்றப்பணி செயலர் திரு. ஜெயராஜ் அண்ணன் அவர்களுடைய மனைவி திருமதி. சாந்தி ஜெயராஜ் (ஆசிரியை) அவர்கள் கடந்த 15.05.2024 அன்று தன் இறுதி ஓட்டத்தை முடித்து தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்துள்ளார்கள். அக்கா எப்போதும் FMPB தான் என் குடும்பம் என்று கூறுவார்கள். விருந்தோம்பலில் மிகவும் சிறந்தவர்கள். தேவனுடைய ஊழியத்தை அதிகமாக நேசித்தவர்கள். பணித்தள ஊழியர்களுக்காக அதிகமாக ஜெபித்தவர்கள். அவர்கள் விட்டுச் சென்ற குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**அருள்திரு. ஆல்பர்ட் சாமுவேல்** – விரிவுப்பணி செயலர், திண்டுக்கல்

# பணித்தள விஜயம்

## அண்ணா நகர் ஜெபக்குழு, சென்னை



கடந்த ஜீன் மாதம் 15, 16-ம் தேதிகளில் FMPB அண்ணாநகர் ஜெபக்குழு சார்பாக 26 பேர் அடங்கிய குழுவாக திருவண்ணாமலை பிராந்தியம், செங்கம் பணித்தளங்களில் நமது இயக்கத்தின் மூலமாக கட்டப்பட்டுள்ள ஆலயங்களைப் பார்வையிடவும், அந்தச் சபைகளில் உள்ள அங்கத்தினர்களை சந்தித்து அவர்களை விசுவாசத்தில் திடப்படுத்தவும் புறப்பட்டுச் சென்றோம். அங்கு ஊழியம் செய்து வரும் அருள்திரு. K.S. ஜோஷ்வா அண்ணனும், அவர்களோடு இணைந்து செயல்படும் மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள், தன்னார்வ ஊழியர்களுடன் சேர்ந்து காரப்பட்டு, கூடுதுரைப்பட்டி, கைலாயபுரம் கிராமங்களுக்குச் சென்று சபை மக்களைப் பார்வையிட்டு இன்னும் அதிகமாய் விசுவாசத்தில் வளர அவர்களை ஊக்கப்படுத்தினோம். 16-ம் தேதி ஞாயிறு அங்குள்ள விசுவாசிகளுடன் காலை ஆராதனையில் பங்குபெற்று பின் மனமகிழ்வுடன் சென்னை திரும்பினோம்.

எங்கள் பணித்தள விஜயத்தின் போது எங்களை அன்புடன் வரவேற்று, உபசரித்து, தங்குவதற்கு இடவசதிகளை ஏற்படுத்தித்தந்த அண்ணன்மார்களுக்கு இருதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறோம். இப்பணித்தள விஜயத்தின் மூலமாக பல அனுபவங்களைக் கற்றுக்கொண்டோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. A.P. கனகராஜ்** - அண்ணாநகர், சென்னை.

# ஊழியர் பிரதிஷ்டை

ஜம்மு மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் ஊழியம் செய்யும் இரண்டு மிஷனெரிகள் 30.06.2024 அன்று கர்த்தரின் நாம மகிமைக்கென்று ஈரோடு மாவட்டம், கோபியிலுள்ள கிறிஸ்து நாதர் ஆலயத்தில் வைத்து அருள்திரு. டேனியல் அவர்களால் பிரதிஷ்டை பண்ணப்பட்டனர். இவர்களை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்க முன்வந்திருக்கும் சத்யா ஸ்டோர் உரிமையாளர்கள் மற்றும் திரு. ஐசக் மனோ குடும்பதினருக்காக தேவனைத் துதிப்போம். இக்குடும்பங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக!.

**அருள்திரு. ஜான் பெனின்**
- விரிவுப்பணி செயலர், ஈரோடு



## பணித்தள விஜயம் & மினி பஸ் அர்ப்பணிப்பு விழா



ஈரோடு மாவட்டம், ஸ்கேன் மற்றும் ஜெபக்குழு தலைவர்கள், அங்கத்தினர்களாக 16 பேர் 22.06.2024 அன்று அங்கலேஷ்வர் சென்றடைந்தோம். அன்றைய தினம் ஈரோடு மாவட்டம் ஸ்கேன் மற்றும் ஜெபக்குழு சார்பாக ரூ.28 இலட்சம் மதிப்புள்ள மினி பஸ், குஜராத் போக்டி சிறுவர் விடுதிக்காக கர்த்தருடைய நாம மகிமைக்கென்று அர்ப்பணிப்பு செய்யப்பட்டது. தொடர்ந்து ஊழியர்களின் சாட்சிகள் மற்றும் போக்டி சிறுவர் விடுதி பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள் உற்சாக மூட்டுவதாக அமைந்தது. அன்றையதினம் இரவு மோஸ்தா பணித்தளம் சென்று விசுவாசிகளை சந்திக்கவும், மறுநாள் 23.06.2024 ஞாயிறு ஆராதனையை விடுதி சிறுவர்களோடு சேர்ந்து ஆராதிக்கவும் தேவன் கிருபை செய்தார். அன்று மாலை ஜெபக்குழு தலைவர்கள் இணைந்து புதிதாக சேர்ந்துள்ள 50 சிறுவர்கள் தங்குவதற்கு ரூ.22 இலட்சம் செலவில் முதல் மாடி கட்டுமான பணிக்கு உதவி செய்வோம் என்று தீர்மானம் செய்தனர். பின் அங்கிருந்து புறப்பட்டு உற்சாகத்துடன் ஈரோடு வந்து சேர தேவன் கிருபை செய்தார்.

**அருள்திரு. ஜான் பெனின்** – விரிவுப்பணி செயலர், ஈரோடு

## மத்திய சென்னை நடத்தும்




நாள்: 16.09.2024, காலை 9.00 மணி துவங்கி மாலை 5.00 மணி வரை

இடம்: YMCA, நந்தனம்

செய்தியாளர்கள்: **Rev. இம்மானுவேல் ரஞ்ஜித்சிங்,** FMPB, Chennai.
**Dr. சாம் டேனியல்**

பணித்தள பகிர்வு: **Rev. காட்வின் கிருபாகரன்** (மால்தோ மிஷனெரி, ஜார்கண்ட்)

தொடர்புக்கு: 9884565622, 9444396215,9444944188, 9444210711,

# சில்லி திருச்சபை வரலாறு

**உத்தரப்பிரதேச மாநிலம், காட்டாம்பூர் பணித்தளம், கான்பூர் பிராந்தியம் - வட மண்டலம்**




## பொதுவான தகவல்கள்

சில்லி திருச்சபையானது உத்தரப்பிரதேச மாநிலம், கான்பூர் நகர் மாவட்டம், காட்டாம்பூர் தாலுக்காவிலுள்ள சில்லி என்ற நடுத்தர கிராமத்தில் அமைந் துள்ளது. இது உத்தரப்பிரசேத்தில் அதிக கல்வியறிவு பெற்ற கிராமங்களில் ஒன்றாகும். இந்திய அரசியலமைப்பு மற்றும் பஞ்சாயத் ராஜ் சட்டத்தின்படி இக்கிராமம் சர்பஞ்ச் (கிராமத் தலைவர்) ஆல் நிர்வகிக்கப்படுகிறது. இக்கிராமத்தில் பிற்படுத்தப்பட்ட சமுகத்தைச் சேர்ந்த மக்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர்.

## ஆரம்பம்

1991-ம் ஆண்டு மார்ச் மாதம் காட்டாம்பூர் பணித்தளம் துவங்கப்பட்டது. அருள்திரு. அசரியா ராஜ்குமார் மற்றும் அருள்திரு. ராஜா எட்வின் மோசஸ் ஆகியோர் இப்பணித்தளத்தின் முன்னோடி மிஷனெரிகள். 1993 ஏப்ரலில் அருள்திரு. பீட்டர் ஹரிராம் அவர்களால் முதல்முறையாக சில்லி கிராமத்தில் சுவிசேஷ விதை விதைக்கப்பட்டது. ஆனால் அவ்விதை வளர்ந்து கனிகொடுக்க ஆரம்பித்தது 1999-ம் வருடம். அருள்திரு. சி.ஆர். ஜார்ஜ் மற்றும் சுதேச ஊழியர் திரு. சுரேந்தர் குமார் சில்லி கிராமத்திற்கு சென்று கைப்பிரதி ஊழியம் செய்தபோது டியூஷன் நடத்திக்கொண்டிருந்த திரு. ராம்சாஹி என்பவருக்கும் சுவிசேஷம் அறிவித்து கைப்பிரதியும் கொடுத்தனர். கைப்பிரதியை வாசித்த திரு. ராம்சாஹியின் உள்ளத்தை தேவன் தொட்டார்.

### முதல் விசுவாசி திரு. ராம்சாஹியின் சாட்சி:

நான் சிறு வயது முதல் பிசாசின் தொல்லையால் அவதிப்பட்டு, ஒவ்வொரு நாளும் அதிலிருந்து விடுபட ஏங்கிக்கொண்டிருந்தேன். மிஷனெரி மூலம் பெற்றுக்கொண்ட கைப்பிரதியை வாசித்து கொண்டிருந்தபோது உண்மை யான தேவனை கண்டுக்கொண்டேன். எனவே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள தீர்மானித்தேன். 29.01.2000 அன்று நானும் என் மனைவியும் அருள்திரு.

சி.ஆர். ஜார்ஜ் அவர்களால் சுக்காப்பூர் கிராமத்தில் திருமுழுக்குப் பெற்றோம். அதன்பின் காட்டாம்பூரிலுள்ள ஆலய ஆராதனையில் கலந்து கொண்டு தேவனை ஆராதித்து வந்தோம். அசுத்தாவியிலிருந்து படிப்படியாக எனக்கு விடுதலைக் கிடைத்தது. இந்த விடுதலையின் மூலம் தேவனின் அன்பினை ருசித்த நான் என் கிராமத்தி லுள்ளவர்களுக்கும் கிறிஸ்தவைப்பற்றி கூறிவந்தேன். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டப்பின் தேவன் என் வாழ்வில் பல அற்புதங்களை செய்து வந்தார்.

## சபை வளர்ச்சி

செப்டம்பர் 2000-ல் சாரதா என்ற பெண் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றார். அதன் மூலம் 29.09.2000 அன்று சில்லி கிராமத்தில் சாரதா, பால்கோவிந்த், அவரது தாய் மற்றும் ஆறு பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். அனைத்து ஞாயிற்று கிழமைகளிலும் முதல் விசுவாசி திரு. ராம்சாஹியின் வீட்டில் வைத்து மாலை நேர ஆராதனை நடைபெற்று வந்தது. முதல் நாள் ஆராதனையில் 15 பேர் கலந்துகொண்டனர். 2000-ம் ஆண்டு இறுதிக்குள் சில்லி கிராமத்தில் 26 பேர் ஞானஸ்நானம் பெற்று தேவனண்டை திரும்பினர். இரவு கூட்டங்களை விசுவாசிகள் தாங்களாகவே நடத்தி வந்தனர்.

**சபை மூப்பர் ராஜேஷின் சாட்சி:**



என் தாயாரின் மரணத்திற்குபின் நான் காய்ச்சலினால் தொடர்ந்து அவதியுற்று வந்தேன். அநேக சிகிச்சைகளை மேற்கொண்டு வந்தும் எனக்கு சுகம் கிடைக்கவில்லை. இவ்வுலகத்தில் யாராலும் என்னை குணப்படுத்த முடியாது என்று நினைத்திருந்தேன். ஒருநாள் என் கிராமத்திலுள்ள திருமதி. ராணி என்ற விசுவாசி என்னிடம் ஒரு வேதாகமத்தை கொடுத்து அதை வாசிக்கும்படியாகவும், காட்டாம்பூரிலுள்ள ஆலயத்திற்கு செல்லும்படியாகவும் கூறினார். முதல் நாள் மூன்று பக்கங்கள் வாசித்தேன். காய்ச்சலிலிருந்து எனக்கு கொஞ்சம் சுகம் கிடைத்தது. அந்த பரிசுத்த வேதாகமத்தில் குணப்படுத்தும் வல்லமை உள்ளதென்று நம்பினேன். ஆனால் மறுபடியும் எனக்கு காய்ச்சல் வந்தபோது என் மனைவி என்னிடம் 'பூரண குணமடைய தொடர்ந்து வேதாகமத்தை வாசியுங்கள்' என்று கூறினாள். நான் 40 பக்கங்கள் வாசித்தபோது இயேசு கிறிஸ்துவை குறித்து அதிகம் அறிந்து கொண்டேன். அதன்பின் நான் காட்டாம்பூரிலுள்ள ஆலயத்திற்கு சென்று வந்தேன். 2007-ல் நானும் என் மனைவியும் அருள்திரு. பால்தயாசிங் அவர்கள் மூலம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம்.

ராம்பூர் கிராமத்தைச் சேர்ந்த விஜயகாந்தி & ராஜன் தம்பதியினருக்கு 12 ஆண்டுகளாக குழந்தையில்லை. அவர்களுக்காக ஜெபித்தபோது தேவன் ஒரு பெண் குழந்தையை தந்து ஆசீர்வதித்தார். இந்த அற்புதம் மூலம் அக்கிராமத்தில் அநேகர் தேவன் மேல் விசுவாசம் வைக்க ஆரம்பித்தனர். பின்நாட்களில் சில்லி கிராமத்தில் ஞாயிறு காலை ஆராதனை துவங்கப்பட்டது. சுதேச ஊழியர் திரு. அனில்குமார் ஆராதனையை நடத்தி வந்தார். 2010-ல் புதிய ஆலயம் கட்டியபின்

அநேக பழைய ஆராதனைக்குழுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டு இவ்வாலயம் சில்லி குருசேகரமாக உருவெடுத்தது. இதுவரை 319 பேர் திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் அங்கத்தினராய் இணைந்துள்ளனர்.

## ஆலய நிலம் & கட்டுமானம்

01.07.2009 அன்று அப்போதைய பிராந்திய செயலரான அருள்திரு. என். ராஜதுரை அவர்கள் முன்னிலையில் திரு. கமலேஷ் குமார் குப்தா அவர்களிடமிருந்து ஆலயம் கட்ட நிலம் வாங்கப்பட்டது. ஆலயத்தின் பெயர் '**பிரபு ஈசு மசி சத்சங் பவன்**' 04.03.2010-ல் ஆலயத்திற்கான அஸ்திபாரம் போடப்பட்டது. விசுவாசிகள் கட்டுமானப்பணியில் பெரிதும் உதவினர். அருள்திரு. பால்தயாசிங் அவர்கள் சில்லி பணித்தள மிஷனெரியாக பணி செய்த போது ஆலயம் கட்டப்பட்டது. 05.10.2010 அன்று அருள்திரு. இஸ்ரேல் (விரிவுப்பணி செயலர், திருநெல்வேலி) அவர்களால் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திரு. செல்வராஜ் (கௌரவ முன்னேற்றப்பணி செயலர்) அவர்கள் பிரதிஷ்டை ஆராதனையில் செய்தி அளித்தார்.



## ஆராதனைக்குழுவும் & மக்களினங்களும்

சில்லி ஆலயத்தின் உறுப்பினர்கள் மிரன்பூர், லௌகாகா, ஹுசங்காபூர், ஸ்ரீநகர், கமண்டல்பூர், உஸ்மான்பூர், மாதா, பெண்டா, குத்புதின்பூர், பெஹேதா, அயோத்தியாபூர், ராம்பூர்-நாவேடி, பாபுராகா, முகல்பூர், சௌபேபூர், ஷிவ்தாரி, தௌலாத்பூர் மற்றும் சில்லி ஆகிய கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பஸ்வான், சன்க்வார், சமார், கோரி, தோபி மற்றும் பால் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

## அற்புதங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள்

20.01.1992 அன்று சௌபேபூர் கிராமத்தில் நடைபெற்ற பின்தொடர்பணி ஊழியத்தில் 30 பேர் கலந்து கொண்டு சுவிசேஷம் கேட்டனர். கூட்டம் முடிவில் திரு. பர்மேஷ்வர் தனது உறவினருடன் வந்து இன்றிலிருந்து நங்கள் புகைப் பிடிக்கமாட்டோம் என்று கூறி தங்கள் கையிலிருந்த சிகரெட் பெட்டியை மிஷனெரிகளிடம் ஒப்படைத்தார்.

1996 ஜனவரி: பாபுராகா கிராம வாலிபன் தரம்ராஜ் வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டு பேசும் திறணை இழந்தவர். விசுவாசியான திரு. பாபுராம் அவ்வாலிபனை மிஷனெரிகளிடம் அழைத்து வந்தார். ஜெப வேளையில் தேவன் அவனைத் தொட்டு, பேசும்படி கிருபை பாராட்டினார்.

2001 ஆகஸ்டு: சுதேச ஊழியர்களான திரு. க்யானந்தர் மற்றும் திரு. மகேந்தர் முகல்பூர் கிராமத்தில் ஊழியம் செய்த போது, பக்கவாதத்தினால் 5 வருடமாக நடக்கமுடியாமலிருந்த ராதா என்ற பெண்ணுக்காக ஜெபித்த போது தேவன் அற்புத சுகமருளி அவள் நடக்கும்படி செய்தார்.

2003 மார்ச்: 4 வருடமாக நடக்க இயலாமலிருந்த விசுவாசியான பப்புவின் மகள் ஒருநாள் தன் தந்தையிடம், அப்பா இனி என்னால் நடக்கவே முடியாதா என்று

கேட்டபோது, அவர் விசுவாசத்துடன் தன் மகளை நோக்கி 'இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நட' என்று கூறியபோது அவள் உடனே எழுந்து நடந்தாள். அல்லேலூயா!

2013 பிப்ரவரி: மிரன்பூர் கிராமத்தைச் சேர்ந்த விஜய்பாலின் கை, கால் விரல்கள் மடங்கி காணப்பட்டது. பிறவி ஊமையான அவருக்கு அடிக்கடி ஏற்படும் வலிப்பு நோயினால் சரியாக நடக்க முடியாமலும் இருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட அவர் ஆலய ஆராதனையில் தவறாமல் கலந்து கொண்டார். ஆலயத்தை பெருக்கி, பாய் விரித்து, ஆலய வளாகத்தையும் சுத்தமாக வைத்திருந்தார். அதிக நேரம் ஆலய வளாகத்திலேயே செலவிட்ட அவரின் கை, கால் விரல்கள் நேரானதோடு, அவர் நன்றாக பேசவும் ஆரம்பித்தார். அதோடு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து அவர் வலிப்பு நோயினால் பாதிக்கப்படவில்லை. இந்த அற்புதத்தின் மூலம் 3 குடும்பங்கள் மற்றும் ஒரு மருத்துவர் குடும்பமும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். தேவனுக்கே மகிமை!

## *ஆலய நிகழ்வுகள்*

சில்லி ஆலயத்தில் புதன் கிழமை உபவாச ஜெபம் நடைபெற்று வருகிறது. சுதேச ஊழியரோடு விசுவாசிகளும் இணைந்து கிராம சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பிரதிமாதம் முதல் ஞாயிறு நற்கருணை ஆராதனை நடைபெறுகிறது. ஆலய ஆராதனையை சுதேச ஊழியர் பொறுப்பேற்று நடத்தி வருகிறார். இத் திருச்சபை ஊழியங்களுக்காகவும், அநேக ஆத்துமாக்களால் சபை நிரம்பி வழியவும் ஜெபிப்போம்.

## கூடுவாஞ்சேரி பணி மாவட்டம் குடும்பக் கூடுகை 2024

நாள்: 22.09.2024 ஞாயிறுக்கிழமை
நேரம்: மாலை 5.30 மணி துவங்கி 8.30 மணி வரை
இடம்: பாரதியார் மெட்ரிக்குலேஷன் பள்ளி, மகாலட்சுமி தெரு, கூடுவாஞ்சேரி
செய்தியாளர்கள்:
**Rev. பிரபாகர சாரதி,** FMPB, சென்னை
பணித்தள பகிர்வு:
**Rev. பிராங்க்ளின் ஏசுபாதம்,** FMPB மிஷனெரி, ஜார்கண்ட்
தொடர்புக்கு: 9382828265, 9841345295, 9087455555, 9087326247

## பிரசவிக்கப்பண்ணுகிற தேவன் *(ஏசா.66:9)*

ஜார்க்கண்ட் மாநிலம் அமலகாச்சி பணித்தளத்தின் சான்பஹார் கிராமத்தில் நிறைமாத கர்ப்பிணியாயும், அதிக பெலவீனமாயும் இருந்த துலலே பஹாரின்-க்காக நமது சபை விசுவாசிகள் ஜெபித்தபோது வீட்டிலேயே சுகப் பிரசவத்தின் மூலம் குழந்தையைப் பெற்றெடுத்தாள். இதன் மூலம் அவளும் அவளது குடும்பத்தினரும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்தனர். இவ்வற்புதத்தின் மூலம் மேலும் இரண்டு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருகின்றனர்.


# ஊழியர்கள் பிரதிஷ்டை



28.07.2024 அன்று திண்டுக்கல் சி.எஸ்.ஐ. தூய பவுல் ஆலயத்தில் வைத்து நடைபெற்ற ஊழியர்கள் பிரதிஷ்டை ஆராதனைக்காக தேவனைத் துதிக்கின்றோம். நமது ஊழியர்கள் அருட்திரு. ஸ்டேன்லி ஜெயராஜ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். அவ்வாராதனையில் நமது இயக்கத்தின் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி விரிவுப் பணி செயலர் அருட்திரு. டேனியல் தாமஸ் அவர்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைக் குறித்தும், திரு. ரூபன்ராய் அவர்கள் தேவ செய்தியையும் பகிர்ந்து கொண்டார்கள். அன்று நடந்த ஒருநாள் கூடுகையில் சுமார் 600-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்தக் கூடுகையில் பங்குபெற்றோர் 38 கிராமங்களில் நடைபெற்று வரும் நமது ஊழியங்களைத் தாங்க முன்வந்துள்ளனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**அருட்திரு. ஆல்பர்ட் சாமுவேல்,** விரிவுப்பணி செயலர் - திண்டுக்கல்

# மகிமைக்குள் பிரவேசித்துள்ளார்



திரு. ஹென்றி அருள்சேகரன் அவர்கள் தனது 89-ம் வயதில் கடந்த 04.06.2024 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். ஐயா அவர்கள், தமிழக அரசு கூட்டுறவு துறையின் Deputy Registrar மற்றும் உதவித் திட்ட அலுவலர் (A.P.O.) ஆக மிக சிறப்பாக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் கடந்த 1978-ம் ஆண்டு தாராபுரத்தில் ஜெபக்குழுத் தலைவராக ஊழியத்தை ஆரம்பித்து, பெருந்துறை, ஈரோடு, சித்தோடு, பவானி, திருச்சி பகுதிகளில் ஏறக்குறைய 40 ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டார்கள். அன்னாரது மூத்த மகன் அருள்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் FMPB மிஷனெரியாகவும், திருமதி. மேரி, திருமதி. சுனிதா, திரு. கிருபாகரன் ஆகிய மற்ற 3 பிள்ளைகளின் குடும்பத்தினரும் ஜெபக்குழு தலைவர்களாகவும், ஊழியத்தை தாங்குபவர்களாகவும் ஊழியம் செய்கின்றனர். ஐயாவின் 4 பிள்ளைகள் மற்றும் பேரப் பிள்ளைகளின் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**அருள்திரு. மணிமாறன்,** மண்டல செயலாளர், திருச்சி

# பணித்தள விஜயம்



தேவ கிருபையால் கடந்த 6 ஆண்டுகளுக்கு பிறகு திருச்சியிலிருந்து 22 பேர் கொண்ட குழுவாக கடந்த ஜுலை 25-ம் தேதி கிளம்பி 28-ம் தேதி ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள பர்ஹர்வா வந்து சேர்ந்தோம். அன்று அமரபாடா பணித்தளத்தின் பத்தேபூர் கிராமத்தில் திரு. காட்வின் பிரேம்சிங் குடும்பத்தினரால் கட்டப்பட்ட **ஆலயம் சார்ந்த பயிற்சி மையத்தின்** பிரதிஷ்டை ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. 29-ம் தேதி பணித்தள கிராமங்களில் ஆவிக்குரிய கூடுகைகள் நடத்தி, விடுதி, பகல்நேர பராமரிப்பு மையங்களை பார்வையிட்டோம். ஜுலை 30, 31 தேதிகளில் ஜார்கண்ட் மாநில மிஷனெரிகளோடு உபவாச ஜெபம் செய்தோம். அது எங்கள் யாவருக்கும் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. திருச்சியின் மூத்த ஜெபக்குழுத் தலைவர் திரு. சாலமோன் ராஜ் அண்ணன் மற்றும் திருமதி. எஸ்தர் சாலமோன் ராஜ் அக்கா குடும்பமாக வந்து ஊழியப் பணிகளைக் கண்டு அகமகிழ்ந்தனர். குழுவினர் அனைவரும் மிஷனெரிகளின் பிரயாசங்களை நேரில் கண்டு, ஜெபிக்கவும், உதவவும், மிஷனெரி ஊழிய பாரம் பெற்று ஆகஸ்டு 3-ம் தேதி காலை திருச்சி திரும்பினோம். அல்லேலூயா!

**அருள்திரு. மணிமாறன்,** மண்டல செயலாளர், திருச்சி

## மகிமைக்குள் பிரவேசித்தார்



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, திருவண்ணாமலை பகுதி ஜெபக்குழுத் தலைவர் திரு. பாண்டி ஆபிரகாம் அவர்கள் கடந்த 23.07.2024 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். 1987-ம் ஆண்டு துவங்கி 2004-ம் ஆண்டு வரை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் விரிவுப்பணியை சிறப்பான முறையிலே செய்த அவருக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தினரின் ஆறுதலுக்காக தொடர்ந்து ஜெபிப்போம்.

**அருட்திரு. K.V. சந்திரன், விரிவுப்பணி** - திருவண்ணாமலை

## வாலிபர் தரிசனக் கூடுகை - மத்திய சென்னை

| | |
|---|---|
| நாள்: | 16.09.2024 |
| நேரம்: | காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| இடம்: | YMCA, நந்தனம். |
| செய்தியாளர்கள்: | **Rev. இம்மானுவேல் ரஞ்சித்சிங்,** FMPB, சென்னை<br>**Dr. சாம் டேனியேல்,** சென்னை |
| பணித்தள பகிர்வு: | **Rev. காட்வின் கிருபாகரன்** (மால்தோ மிஷனெரி, ஜார்கண்ட்) |
| தொடர்புக்கு: | 9884565622, 9444210711, 9841914101 |




## என் காலங்கள் அவர் கையில்

*குஜராத் மாநிலம், அஹ்வா பணித்தளத்தில் அஜன்குண்ட் கிராமத்தில் எழுப்புதல் கூடுகை முடித்து இரவு வீடு திரும்புவதற்காக சுதேச ஊழியர்கள் சுரேஷ் போயா குடும்பம், மணிலால் பாய் குடும்பம் மற்றும் மிஷனரி விக்னேஷ் பாய் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருக்கும் போது அவர்களுக்கு முன்பாக புலி வந்த போதும், புலி அவர்களை தாக்காமல் காட்டுக்குள் சென்றுவிட்டது. தேவன் அற்புதமாய் தம் ஊழியர்களை பாதுகாத்தார்.*

## 1 செப்டம்பர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வின்செண்ட் பிரேம்ராஜ்

# ஜம்மு

**நெளஷேரா: சியான்லுன்தாங் ஸெள டி. & லிங்நெய்ஹோய்; ஷேக் சுபானி & எமி பாக்கியா**

**துதிக்க:** இரண்டு பேர் இயேசுவின் மீதுள்ள தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டனர். முதன்முறையாக ஜோகஸ்பூர், பாட்டா போன்ற புதிய கிராமங்களில் நற்செய்தியை அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். 20 கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டது. ஆத்தும ஆதாயப் பயிற்சிக்குப் பின் நமது விசுவாசிகள் உற்சாகத்துடன் தங்கள் உறவினர்கள் மற்றும் அயலகத்தாருக்கு நற்செய்தியினை அறிவித்து வருகிறார்கள். ஹோர்மாகிரி கிராமத்தில் ஞாயிறு ஆராதனை துவங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தவறானப் போதனைகளினால் விசுவாசிகளை திசைத்திருப்பும் கள்ள போதகர்கள் மனந்திரும்பவும்; ரஜோரி மாவட்டத்தில் சுவிசேஷத்திற்கு தடையாக காணப்படும் தீவிரவாதிகளின் செயல்பாடுகள் முறியடிக்கப்படவும்; விசுவாசிகளின் பிள்ளைகளான அர்ச்சனா, கலா, சஜன், சாக்ஷி ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்கவும்; புதிய தொடர்பாளர்களான திரிவேந்தர்சிங் – வாய் புற்றுநோய், மைத்ரி தேவி – இடது கை செயலற்ற நிலை, போளிதேவி – தலை சரியாக நிற்க ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருளவும் ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

**நேர்வா: எஸ். இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா**

**துதிக்க:** முதன்முறையாக பங்கால் கிராமத்தில் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகம வகுப்பில் 11 பிள்ளைகள் பங்குப் பெற்று வேத வசனங்களை கற்றுக் கொண்டனர். நேர்வா பணித்தளத்தில் விசுவாசிகளுக்கு எதிராக தீவிரவாதிகள் நடத்த திட்டமிட்டிருந்த கூட்டம் ஜெபத்தினால் ரத்து செய்யப்பட்டது. ஊழியத்தை முடித்து இரவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த ஊழியரின் குடும்பத்தை புலியிடமிருந்து தேவன் பாதுகாத்தார். எதிர்ப்பின் மத்தியிலும் நாராயணசிங் தன்னுடைய வீட்டைக் கட்டி பிரதிஷ்டை பண்ண கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நேர்வா பகுதியில் மதவாதிகள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக செயல்படுவதோடு சென்னையிலிருந்து இங்கு வந்து தங்கி ஊழியம் செய்வோரை தடுக்க வேண்டும் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். நற்செய்தி பணிக்கு சாதகமான சூழ்நிலைகளை தேவன் உருவாக்கித் தர; பிப்லா கிராமத்தைச் சேர்ந்த கிரண்பாயின் மனைவி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற; டுங்லஜ் கிராமத்தில், தாய்மதம் திரும்ப வேண்டுமென்று விசுவாசிகளை கட்டாயப்படுத்தும் எதிர்ப்பாளர்களுடன் தேவன் இடைப்பட; சௌபால், ஜிக்னிபால் மற்றும் குப்வி ஆகிய புதிய கிராமங்களில் திட்டமிட்டுள்ளபடி நற்செய்தி பணிகள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## 2 செப்டம்பர் திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. அஞ்சனா மஸிஹ் சத்ய பிரகாஷ்

### ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ் லாம்வுங்

**துதிக்க:** புத்த மதத்தைச் சேர்ந்த டெஜ்மின் என்ற சகோதரன் கன்னாரி கிராம ஆராதனையில் குடும்பத்துடன் கலந்து கொள்கிறார். நமது விசுவாசி தல்மியா திதி நடத்தி வரும் உணவு விடுதியின் வேலையாட்கள் திடீரென நின்றுவிட்டதால் உணவு விடுதி மூடும் நிலையில் அவர் தேவனை நோக்கி ஜெபித்த போது மீண்டும் புதிய வேலையாட்களுடன் உணவகம் செயல்பட தேவன் உதவி செய்தார். கோல்தி கிராமத்தைச் சேர்ந்த ருன்ஜியா பேன் தனது மகனுடன் வயலுக்குச் சென்றிருந்த போது மயங்கி விழுந்துவிட, அவரது மகன் சுதேச ஊழியரை கைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு ஜெபிக்க வேண்டினான். ஜெபத்தைக் கேட்ட தேவன் ருன்ஜியா பேன் சுயநினைவு பெற்று எழும்ப கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரக நோயினால் பாதிக்கப் பட்டுள்ள நமது விசுவாசியின் சகோதரன் ராஜேஷ் பரிபூரண சுகம்பெற; எப்போதும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் ராம்காளி தம்பதியினர் மத்தியில் தேவன் சமாதானத்தைக் கட்டளையிட; தனது ஜோதிடத்தினால் மக்களை வசப்படுத்தி வைத்திருக்கும் லில்லிதுத் ஜோசியின் இருதயத்தில் தேவன் கிரியைச் செய்ய; இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட தயங்கும் மக்களின் மனங்களில் காணப்படும் பயங்கள் நீங்க ஜெபிப்போம்.

### தானேதார்: ஜெபர்சன் &காயத்ரி

**துதிக்க:** 20 கிராமங்களில் ஜெப நடைபாதை மேற்கொள்ளப்பட்டது. முதியோர் கல்வித் திட்டத்தில் கிராம மக்கள் உற்சாகத்துடன் கலந்து கொள்கின்றனர். பல்லாபெட்டி கிராமத்தைச் சேர்ந்த ஆயிஷா பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். சபை மூப்பர்களுக்கான ஆத்தும ஆதாயப் பயிற்சி கிரமமாக நடைபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல்லபொட்டி மற்றும் சம்மலா கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் நடத்த எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ணவும்; புதிய தொடர்பாளர்களான 8 பேர் விசுவாசத்தில் வளர்ந்து இயேசுவே மெய்யான தெய்வ மென்று அறிக்கையிடவும்; 6 வயது மகனை இழக்கக் கொடுத்துள்ள நமது விசுவாசி அன்மோல் குடும்பத்தினரின் ஆறுதலுக்காகவும்; ஊழியத்தின் வளர்ச்சிக்குத் தேவையான சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித் தரவும் ஜெபிப்போம்.

### சூழ்ந்து கொள்ளும் கிருபை!

*ஜார்க்கண்ட் மாநிலம் பகையா பணித்தளத்தில் பைசா கிராம ஆலய விசுவாசியும் நமது சுதேச ஊழியருமாகிய வீரேந்தர் குஜூரின் பேரன் 4 வயது ஆயுங் குஜூக் மாடியிலிருந்து கீழே விழுந்தாலும் தேவன் அற்புதமாக எந்த சேதமும் இல்லாமல் பாதுகாத்தார். இதுபோல் குல்தீப் எக்கா என்றவரும் வேலை செய்துகொண்டிருக்கும்போது 2-ம் மாடியிலிருந்து கீழே விழுந்து கை, கால்கள் பாதிக்கப்பட்டு பைத்தியமானார். அவரது மனைவி தாராமின் நமது ஆலயத்திற்கு வந்து ஜெபிக்கக் கேட்டுக்கொண்டார். ஊழியர்கள் அவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். அவர்கள் குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொள்ள வாஞ்சைக்காட்டி வருகிறார்கள். கர்த்தருக்கே மகிமை!*

**3**
**செப்டம்பர்**
**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஏகலைவன் ஜேம்ஸ் K., திரு. பென் J. அந்த்ரயோஸ்
திருமதி. சிங் கோயி கிம் கின் சாவ்ம்

## ரிகாங்பியோ

**சங்கர் ஏ. & ரூத் மேரி**

**துதிக்க:** 4 கிராமங்களில் நற்செய்தி பணியும், 2 கிராமங்களில் வெளிபுற சந்திப்பு ஊழியமும் தடையின்றி நடைபெற்றன. மீரா கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளார். பீமா தேவி மற்றும் பிந்த்ரா ஆகியோர் புதிதாக ஆலய ஆராதனையில் பங்கு பெறுகின்றனர். நீண்ட நாட்களாக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த பவன்குமார் தொடர் ஜெபத்தின் மூலம் தற்போது நடக்கும்படி கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரமேஷ், ரோஷன், கர்மன்சிங், பூணம் ஆகியோர் விரைவில் கிறிஸ்துவை அறிக்கையிட; இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஹிரா, தினேஷ், பகத்சந்த் ஆகியோரை தேவன் குணப்படுத்த; அநேக வருடங்களாக குழந்தை பாக்கியத் திற்காக காத்திருக்கும் ரன்ஜு குடும்பத் திற்காக; விபத்தில் காயமுற்றுள்ள 7 வயது சந்தீப்-க்கு தேவன் பரிபூரண சுகம்தர; நடக்கவிருக்கும் ஆவிக்குரியப் பயிற்சி முகாம்கள், பெண்கள் கூடுகைகள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

# பஞ்சாப்

## அஹ்மத்கட்மண்டி

**கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா**

**துதிக்க:** ஒருவர் கிறிஸ்துவே தெய்வமென்று அறிக்கை செய்துள்ளார். காச நோய் மற்றும் ஆஸ்துமாவினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த ரோகிடா கிராமத்தைச் சேர்ந்த லவ்பிரித் தொடர் ஜெபத்தினால் சுகம் பெற்றார். தாலோர் மற்றும் ஜகரா கிராமங்களில் நடத்தப்பட்ட சிறுவர் வேதாகம வகுப்புகளில் ஆண்டவரை அறியாத 50 பிள்ளைகள் கலந்து கொண்டனர். ரோகிடா கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஹ்மத்கட்மண்டியில் பெரிய அளவில் இரண்டு நாட்கள் நடத்தவிருக்கும் விசுவாசிகளின் கூடுகை ஆசீர்வாதமாய் முடிய; குருப்ரீத் மற்றும் ரேகா ஆகியோரை ஆலயம் செல்லவிடாமல் தடுக்கும் அவர்களது கணவர் வீட்டார் மனந்திரும்ப; காவலர் பணிக்கு தேர்வு எழுதியுள்ள ஹர்ஜித் கௌர் வெற்றி பெற்று வேலையில் சேர; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிபோயுள்ள கனிதா, பிரேம் ஜித், கிருஷ்ணா, ஜஸ்பிரீத், சீமா ஆகியோர் மீண்டும் விசுவாசத் திற்குள் வர; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயுள்ள 8 பேருக்காக ஜெபிப்போம்.

## *சவுலே சவுலே!*

*மகாராஷ்டிராவிலுள்ள துலே பணித்தளத்தில் பேட்லா கிராமத்தைச் சேர்ந்த சந்திப் என்ற 20 வயது வாலிபன் அநேக நாட்களாக விசுவாசிகளை கேலியும், கிண்டலும் செய்வது மட்டுமின்றி கிறிஸ்தவக் கூட்டங்களுக்குச் செல்ல வேண்டாம் என்று கூறி இடையூறு செய்து வந்த நிலையில் திடீரென்று ஒருநாள் அவன் கண் பார்வையை இழந்துவிட்டான். அவன் அநேக மந்திரவாதிகளிடம் சென்றும் பயனில்லாத காரணத்தினால் எய்க்காலே என்ற இடத்தி லுள்ள நம் சுதேச ஊழியரை அணுகி கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக தான் செய்த அனைத்தையும் கூறி தனக்காக ஜெபிக்க கேட்டுக் கொண்டான். ஜெபத்திற்கு பின் சந்திப் சிறிது பார்வையடைந்துள்ளான். இன்னும் முழுமையான பார்வையடையவும், அவன் இரட்சிக்கப்படவும் தொடர்ந்து ஜெபிப்போம்.*

*உபவாச ஜெபநாள்*

## 4 செப்டம்பர்
புதன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மலங்மெய் சனாலுங் டிட்டுங்பெள

### புத்லாடா பிராந்தியம்: ஹமோம் நாபா சிங் & துலந்தி ரியாங்

**துதிக்க:** சத்சங் மற்றும் வெளிப்புற நற்செய்தி அறிவிக்கும் நிகழ்ச்சிகள் மூலம் சுமார் 1200 பேருக்கு நற்செய்தி பகிரப்பட்டுள்ளது. தர்சம்சிங் & சரண்ஜித் கௌர் குடும்பத்தில் பிரச்சனை விவாகரத்து வரை செல்ல உபவாச ஜெபத்தின் மூலம் தற்போது சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர். பிசாசின் தொந்தரவினால் குடும்பத்தின் ஆரோக்கியமின்மை மற்றும் சமாதானக் குறைச்சலைச் சந்தித்து வந்த பிந்தர்சிங் & ஜஸ்விந்தர் கௌர் ஆகியோருக்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் மூலம் சமாதானம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கவிருக்கும் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி, கைப்பிரதி ஊழியம் தடையின்றி நடைபெற; இரண்டு வருடத்திற்கு முன் காணாமல் போயிருக்கும் 18 வயது ஹர்ப்ரீத் சிங் பத்திரமாக வீடு திரும்ப; நந்துகார், சக்பக்சா, கில்கலன் மற்றும் யாத்ரி கிராமங்களில் புதிய தொடர்பாளர்கள் கிடைக்க; நேகா, ரோஹித் தம்பதியினர் கிறிஸ்துவை அறிக்கையிடு வதிலுள்ள தடைகள் நீங்க ஜெபிப்போம்.

### ஜைத்தோ
**சித்தரஞ்சன் தாண்டி & தெஜஸ்விதா**

**துதிக்க:** 11 பேர் கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட்டுள்ளனர். 410 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, கைப்பிரதிகள் வழங்கப்பட்டன. ஹர்ஷ், கரண் ஆகியோர் ஜெபத்தின் மூலம் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றனர். பஸ்கனாவில் சபை மூப்பர்களுக்கு சிறப்புப் பயிற்சி நடத்தப்பட்டது. விசுவாசத்தில் பின்மாற்றம் அடைந்திருந்த பிட்டு சிங் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் மல்கிட் சிங், பப்பு சிங், அம்மன்தீப், மன்டார்சிங் ஆகியோர் விசுவாசத்தில் வேரூன்றி வளர; போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு, அதன் மூலம் வறுமை, சமாதானமின்மை ஆகியவற்றை எதிர்கொள்ளும் தர்சம்சிங், காகாசிங், பிட்டுசிங், ராஜுசிங் ஆகியோர் விடுதலை பெற; விசுவாசிகளை தாய்மதத்திற்கு திரும்ப வற்புறுத்தி வரும் வந்தனா, சுமன், குலுவா ஆகியோர் தேவனால் சந்திக்கப்பட; ரஜினி & சுமன் குடும்பத்தில் காணப்படும் பிரச்சனைகள் நீங்கி சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

### வழியில் காக்கும்படி தூதர்களுக்கு கட்டளையிட்ட தேவன்

*இமாச்சல் பிரதேசம், நேர்வா பணித்தளத்தில் பணியாற்றும் நமது மிஷனெரி தம்பதியினர் அட்டல் என்ற கிராமத்தில் மாலை நேர ஞாயிறு ஆராதனையை நடத்தினர். அன்று வழக்கத்திற்கு மாறாக அநேகர் ஜெபிக்க வந்ததினால் ஆராதனையை முடிக்க வெகு நேரமாகிவிட்டது. மறுநாள் காலையிலே வேறு ஒரு கிராமத்திற்கு ஊழியம் செய்ய செல்ல வேண்டி இருந்ததால், இரவே வீடு திரும்ப முடிவு செய்து தங்கள் இரு சக்கர வாகனத்தில் போய்கொண்டிருந்தனர். மலைப்பாங்கான பாதை, கடும் இருட்டு, வாகனத்தில் முகப்பு விளக்கின் ஒளி தவிர வேறு வெளிச்சமில்லை. ஊழியக் காரியங்களை பேசியவாறே போய்க்கொண்டிருந்த அவர்கள் வாகனத்தின் முன் சுமார் 20 அடி தூரத்தில் சாலையின் வலைவில் பெரிய புலி ஒன்று நின்று கொண்டிருந்தது. உடனடியாக வாகனத்தை நிறுத்தி அமைதியாக ஜெபம் செய்தனர். சுமார் 5 நிமிடங்கள் அங்கே நின்று கொண்டிருந்த புலி பின்னர் மலை சரிவிலிருந்து இறங்கிச் சென்றுவிட்டது. மிஷனெரிகள் பத்திரமாக வீடு வந்த சேர கர்த்தர் உதவினார். அல்லேலூயா!*

**5**

**செப்டம்பர்**

வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எசக்கியா R.

திரு. தர்மேந்திரா பரிச்சா

## பட்டாலா

### வால்வி நேதாஜி டாடு & கல்பனா

**துதிக்க:** கால்வி மற்றும் கொட்டலா முசா ஆகிய புதிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டு, சுமார் 650 பேர் முதன்முறையாக இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொண்டனர். 50 வயது நிரம்பிய கோல்டி என்ற சகோதரனுக்கு 3-வது முறையாக மாரடைப்பு ஏற்பட்டதால் 70 மணி நேரம் மட்டுமே அவர் உயிருடன் இருப்பார் என்று மருத்துவர் சொன்ன நிலையில் விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினால் தேவன் அவருக்கு நீடித்த ஆயுளை தந்துள்ளார். அஞ்சனா, ரோஷன் ஆகியோர் தொற்று வியாதியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றுள்ளனர். சபை கமிட்டி உறுப்பினர் சாலீமை பெரிய விபத்திலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவேதா மருத்துவ சிகிச்சை பெற்றும் காய்ச்சலிலிருந்து சுகம் கிடைக்காத நிலையில் தேவன் அவளுக்கு பரிபூரண சுகம் தர; ஷாமா கண் பாதிப்பிலிருந்தும், சுகிபாய் மற்றும் அவரது மகன் பஞ்சாப்சிங்-க்கு சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமருள; விசுவாசத்தை விட்டு பின்வாங்கியதோடு விசுவாசிகளுக்கு இடையூறு செய்துவரும் ஜான்மஸி, கனிமஸி, யுக்கோப் மஸி ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டு தேவ பயத்தில் வளர; புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ள அனிதா, சோனியா, மஞ்சு, சுமன், தயாள்சிங் மற்றும் ரகுநாத் விசுவாசத்தில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.

# ஹரியானா

## ஜீவன் நகர்

### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** ஜீப் குழு மூலம் சுமார் 400 பேருக்கு சுவிசேஷத்தைப் பகிரவும், 2 இடங்களில் திரைப்பட ஊழியம் செய்யவும் தேவன் கிருபை செய்தார். நீண்ட நாட்கள் ஜெபித்ததின் விளைவாக ஜெய்லா சிங் என்ற விசுவாசி புதிதாக ஜவுளி கடை துவங்க தேவன் அவருக்கு உதவி செய்தார். கடுமையான வயிற்று வலியிலிருந்து அம்மன்ஜித் சிங் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். தெப்வாலி சபை ஆராதனையில் அநேகர் கலந்து கொள்ள கிருபை செய்யும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள், சுதேச ஊழியருடன் இணைந்து உற்சாகத்துடன் ஊழியம் செய்ய முன்வர; சமூக தடைகளினால் தேவனை அறிக்கையிட தயங்கும் கோராசிங், சஞ்சு, தர்ஷன்சிங் ஆகியோரின் குடும்பங்கள் மற்றும் பாகிரதி, சுரேந்தர், ராஜ்குமார் ஆகியோரின் தந்தையர்கள் தைரியத்துடன் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய; ராய்சீக்கியர், கும்ஹார், மாலி, மஹாஷா ஆகிய இன மக்கள் மத்தியில் தேவன் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## 6 செப்டம்பர்

வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஷைக் சுபானி

# ராஜஸ்தான்

## தபுக்காரா

**ராஜம்மாள் ஜாண்சன்,**
**டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி**

**துதிக்க:** 9 பேர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு அறிக்கை செய்துள்ளனர். அசுத்தாவியின் தாக்குதலினால் மனநிலை பாதிக்கப்பட்டிருந்த பன்சிலாவுக்காக விசுவாசிகள் கூடி ஜெபித்த போது தேவன் விடுதலை அருளினார். விசுவாசி சுனிதா மிகுந்த ஜெபத்துடன் தனது அனைத்து சேமிப்பையும் செலவழித்து தோண்டிய ஆழ்துளைக் கிணற்றில் குறைந்த ஆழத்திலே மிகுதியான தண்ணீர் கிடைக்க தேவன் கிருபை செய்தார். புதிதாக குட்டா மற்றும் பிரியங்கா தம்பதியினர் ஆலயத்திற்கு வர ஆரம்பித்துள்ளனர். தீவிர மூட்டு வலியினால் நடக்க இயலாமலிருந்த பியாரிலா, ஜெபத்திற்குப் பின் நடந்து ஆலயம் வர கிருபை பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் கிறிஸ்துவில் வேரூன்றி வளர; விசுவாசி மனுவுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பை தேவன் தர; சர்காவ் கிராமத்தில் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள பூணம் பேனின் கணவர் விடுதலை பெற; அனிதா, ரேஷ்மா மற்றும் ரோமா ஆகியோருக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

## காஜுவாலா

**வி. குமார் & பெட்ரிசியா**
**தமிழ்ச்செல்வி**

**துதிக்க:** ரீனா என்பவர் கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தன்னுடைய விசுவாச ஜெபத்தின் மூலம் முதுகலைப் பட்டப் படிப்பில் 76% மதிப்பெண்கள் பெற்றது மட்டுமின்றி வேலைக்கான தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இதன் மூலம் ரீனா ஆலயம் செல்வதை தடுத்து வந்த அவரது பெற்றோர்கள் தற்போது சுவிசேஷத்திற்கு செவிசாய்த்து வருகிறார்கள். புதிதாக ஜஸ்வந்த் பீர் என்பவர் ஊழியத்தில் இணைந்துள்ளார். 17 கிராமங்களில் பின்தொடர் பணி செய்யவும், அநேகரை தங்கள் இல்லங்களில் சந்தித்து ஜெபிக்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வேலை நிமித்தம் ராம்சிங் பூருக்கு மாறுதலாகி செல்லும் பரம்சித்சிங் மற்றும் சுகுணா குடும்பங்கள் தங்கள் சாட்சியினைக் காத்துக்கொள்ள; வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கும் விசுவாச இளைஞர்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்பினை தேவன் கட்டளையிட; அடிக்கடி மயங்கி விழும் ராம்சரண் பூரண குணமடைய; வரும் நாட்களில் திட்டமிட்டப்படி வாலிபர், மூப்பர், பெண்கள் மற்றும் சிறுவர் கூடுகைகள் தடையின்றி நடத்தப்பட; எல்லை பாதுகாப்பு படையினருக்கு பயந்து ஆலயம் வருவதை தவிர்க்கும் விசுவாசிகளின் பயங்கள் நீங்கி ஆலயத்திற்கு வந்து தேவனைத் ஆராதிக்க ஜெபிப்போம்.

## 7 செப்டம்பர்
சனி

### கேர்வாடா
**போயா தேவுபாய் & ஜாமுபேன்**

**துதிக்க:** 10 பேர் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்தனர். 10 வருடங்களாக குழந்தையின்றி தவித்த விக்னேஷ் குடும்பம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு விசுவாசத்துடன் ஜெபித்த போது தேவன் அவர்களுக்கு குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட்டார். விஷ பாம்புக் கடியிலிருந்து காலுபாய் ஜெபத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டார். காந்திலால் ஜெயந்திலால் ஆகியோர் ஜெபத்தின் மூலம் காசநோயி லிருந்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டிவரும் பாரா கிராமத்தில் விரைவில் ஆராதனைக் குழு துவங்கப்பட; ஹர்வாரா மற்றும் பாலக்ரா கிராமங்களில் சுவிசேஷத் திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மறையவும், எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பவும்; ஓடா கிராமத்தில் கடந்த இரண்டு மாதங்களாக இரத்த வாந்தியினால் கஷ்டப்பட்டு வரும் சங்கர் பரிபூரண சுகம்பெற; திருமணமாகி 15 வருடங்களாகியும் குழந்தையின்றி தவிக்கும் நாராயணன் மற்றும் நரிநாத் குடும்பங்களை தேவன் குழந்தை செல்வத் தினால் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

### உதய்பூர்
**ஆஷிஷ் குமார் & சவிதா தேவி**

**துதிக்க:** 29 பேர் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கை யிட்டுள்ளனர். 6 குடும்பங்கள் புதிதாக ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருகிறார்கள். இரண்டு இடங்களில் நடைபெற்ற தேடுவோர் முகாமில் சுமார் 150 பேர் கலந்து கொண்டு சுவிஷேத்தைக் கேட்டனர். பல வருடங்களாக குழந்தைக்காக ஜெபித்து வந்த விமலா மற்றும் நிர்ஜோடா குடும்பத்தை குழந்தைப் பாக்கியத்தினால் ஆசீர்வதித்துள்ள தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் பிடியிலிருந்து முகேஷ், பப்லு, மோகன், ஆனந்தி, சியாம்லால் ஆகியோருக்கு தேவன் விடுதலை தர; குடிப்பழக்கத்தினால் கடன் பிரச்சனையில் சிக்குண்டு, குடும்பத்தில் சமாதானமின்றி தவிக்கும் பிரபுலால், சம்புலால், சிவா, பாம்ராஜ் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டு சமாதானத்துடன் வாழ; விபத்தில் கை எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ள விசுவாசி பிரவீன் விரைவில் குணமடைய ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

### பஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** 3 கிராமங்களில் சுமார் 360 பேருக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்திட தேவன் கிருபை செய்தார். சுந்தர்லால் ஆபத்தான வாகன விபத்திலிருந்து தேவனால் பாதுகாக்கப்பட்டார். புஷ்பாதேவி அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தினால் விடுவிக்கப்பட்டார். 29 இடங்களில் சிறப்பு சத்சங் கூடுகைகள் நடத்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டோட்டாபரியா கிராமத்தில் ரித்திக் என்ற 6 வயது சிறுவனுக்கு தொடர்ந்து மூக்கிலிருந்து வடிகிற இரத்தம் நின்று சுகம்பெற; பைரியா கிராமத்தில் இருதய வீக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள 7 வயது சிறுவன் யுவராஜ்க்கு தேவன் சுகமருள; லால்மன் கல்லீரல் பிரச்சனையிலிருந்து சுகம்பெற; ராமாகால் என்பவரது நிலம் எவ்வித பிரச்சனையுமின்றி அவருக்கு கிடைக்க; திட்டமிட்டபடி விசுவாசிகள் முகாம், நற்செய்தி பகிரும் நிகழ்வு சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## 8 செப்டம்பர் ஞாயிறு

# உத்தரப் பிரதேசம்

### ஹசேரன்

**சுரேஷ் மால்தோ & பிரேம்லதா**

**துதிக்க:** 8 கிராமங்களில் பின்தொடர் பணி செய்யப்பட்டதின் விளைவாக அநேகருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். இரண்டு இடங்களில் நடத்தப்பட்ட உபவாச ஜெபக் கூடுகையில் விசுவாசிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஜெபித்தனர். விசுவாசிகளின் ஆவிக்குரிய எழுப்புதல் முகாம் சிறப்பாக நடைபெற்றது. வேதாகம வகுப்புகள் கிரமமாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை விட்டு பின் வாங்கியுள்ள மோட்டாகப்பூர் கிராமத்தின் உப்பேஷ் குடும்பம் தேவனிடம் திரும்ப; காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ள கனிகாப்பூர் சர்வேஷ், பக்கவாதத்தினால் அவதியுறும் மஞ்சில்லா கிராமத்தின் அனுராக் ஆகியோரை தேவன் குணப்படுத்த; ஹர்சங்ன் கிராமத்தில் தற்காலிகமாக ஆலயம் கட்டப்பட; அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்ப ஜெபிப்போம்.

### கோண்டா பணித்தளம் & சிறுவர் விடுதி

**ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா சௌத்ரி**

**துதிக்க:** ஜுலை மாதம் 15 சிறுவர்கள் புதிதாக விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளனர். நட் இன மக்களில் இரண்டு பேர் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கோண்டா விடுதி நிலத்திற்கு எதிராக போடப்பட்டிருந்த வழக்கில் நமக்கு சாதகமாக வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவு தொடர்கிறது. விடுதியில் படித்து நல்ல வேலையில் இருக்கும் முன்னாள் மாணவன் கேத்தன் குமார் ஒரு குழந்தையை ஆதரிக்க முன்வந்துள்ளமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுதியில் 10-ம் வகுப்பு படிக்கும் ஆஷிஷ், அன்மித், மோஹித் மற்றும் 12-ம் வகுப்பு படிக்கும் அபிஷேக், சிவம் ஆகியோரை தேவன் ஞானத்தினால் நிரப்ப; கடந்த 10 ஆண்டுகளாக பிசாசின் கட்டு களினால் அவதிப்படும் வித்யாராமின் தாயாருக்கு தேவன் விடுதலை தர; நட் இன மக்கள் மத்தியில் தேவன் மாபெரும் எழுப்புதலைக் கட்டளையிட; மிஷனெரியின் பெற்றோர் மற்றும் உடன் பிறந்தோர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

### பஸ்தி: ஜெ. ஸ்ரீனிவாசன் & ஷீபா ஜி

**துதிக்க:** இரண்டு பேர் கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட்டு தேவனின் மந்தையில் இணைந்துள்ளனர். நைகாவ் கிராமத்தில் நடைபெற்ற சத்சங் நிகழ்ச்சியிலும், படேபன் கிராமத்தில் அனு சரிக்கப்பட்ட பஸ்தி தினம் நிகழ்ச்சியிலும் திரளானோர் கலந்து கொண்டனர். இரத்த அளவு மிகவும் குறைந்து மரிக்கும் தருவாயிலிருந்த ஜலனியா கிராமத்தின் சீமாவுக்காக விசுவாசிகள் கூடி ஜெபித்த போது அற்புத சுகத்தைத் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதன் கிழமை நடைபெற்ற உபவாச ஜெபக் கூட்டத்தில் மத தீவிரவாதிகள் ஆலயத்திற் குள்ளே நுழைந்து ஜெபத்தை நிறுத்துமாறு எச்சரித்து சென்றுள்ளனர். எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; சந்திரபூர் கிராமத்தில், அதிக சர்க்கரை அளவினால் (500) பாதிக்கப்பட்டுள்ள ஷீபா என்ற சிறு பிள்ளைக்கு தேவன் இரக்கம் பாராட்ட; ராஜு, திலீப், ராஜேந்தர் ஆகிய குடும்பங்களை தேவன் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்க; பக்கவாதத்தினால் பாதிக்கப் பட்டுள்ள பன்சியா கிராமத்து அம்மான் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## 9 செப்டம்பர் திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஏசுரெத்தினம் தியாகராஜன்
திரு. அனில்குமார் பிசோயி
திருமதி. ராணி சுகாந்தோ சிங்
திரு. ஜீவானந்தன் M., திரு. ரூபன் டுடு
திருமதி. ராந்தே நய்னாபேன் தேவ்ஜிபாய்

### காட்டாம்பூர்

**ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்**

**துதிக்க:** எதிர்ப்பாளர்களால் மூடப்பட்டிருந்த காட்டாம்பூர், ஜகனாபாத் மற்றும் பாவன் ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டு ஆராதனைகள் நடைபெற தேவன் உதவிச் செய்தார். சிர்சுவல் ஆலய தினம் சிறப்பாய் நடைபெற்றது. ஜெயா மற்றும் ரீட்டா விஷ பாம்புக் கடியிலிருந்தும், வினோத் விபத்தி லிருந்தும் தேவனால் பாதுகாக்கப்பட்டனர். ஊக்கமான ஜெபத்தினால் ராம்ஷேசா, நரேஷ், ஜலால் ஆகியோருக்கு அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு ஏற்ற வாகனங்கள் வாங்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயங்கள் திறக்கப்பட்ட போதிலும் விசுவாசிகள் மனதில் நிலவும் பயங்கள் நீங்கி தைரியத்தின் ஆவியை தேவன் தந்தருள; ஆலயங்கள் அடைக்கப்பட்டதை எதிர்த்து நடக்கும் நீதிமன்ற வழக்கில் சாதகமான தீர்ப்பு வழங்கப்பட; வேதபிரகாஷின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி தடையின்றி நடக்க; உடல் நலிவுற்று ஆலயம் வர முடியாமல் தவிக்கும் ரிங்கு மற்றும் மகிமாவுக்கு தேவன் பரிபூரண சுகம் தர ஜெபிப்போம்.

### பார்த்தனா

**எஸ். ராஜன் & ஜெபமலர்**

**துதிக்க:** 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். 5 வருட ஜெபத்திற்கு பின் சந்தியாவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். வேலை செய்யும் இடத்தில் ஆசிட் டியூப் வெடித்த நிலையில் சிறு காயங்களுடன் சுமித் குமாரை தேவன் பாதுகாத்தார். 7 வருடங்களாக பேச இயலாமலிருந்த ரிஷாப் குமார் ஜெபத்திற்கு பின் பேச ஆரம்பித்துள்ளான். சுனிதா இரத்த புற்று நோயிலிருந்தும், சாந்த்ராம் தொண்டை கட்டியிலிருந்தும், தீ விபத்தில் தலையில் ஏற்பட்ட காயத்திலிருந்தும் ஜெபத்தினால் சுகம் பெற்றனர். ராஜ்குமாரி, ரிகான்சூ ஆகியோரை அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேஹ்னா ஆலய வழக்கு வரும் அக்டோபர் மாதம் விசாரணைக்கு வரவுள்ளது. தேவனுடைய வழிநடத்து தலுக்காக; நப்லாகா பூர்வா கிராமத்தில் தடைபட்டுள்ள ஆராதனை மீண்டும் துவங்கப்பட; பிரசவத்திற்காக காத்தி ருக்கும் சுதேச ஊழியரின் மனைவி ஆர்த்திக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு பின் சுகவீனப்பட்டுள்ள தன்னார்வ ஊழியர் சப்னாவுக்கு தேவன் பரிபூரண சுகம்தர; மம்தா, அனுராதா, சுதீஷின் மனைவி ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; 15 வயது பிரியா – தண்டுவட புற்று நோய், சூரஷ் – இரண்டு சிறுநீரகங்களிலும் கல், ஆர்த்தி – கர்ப்பப்பை கட்டி மற்றும் பெலவீனப்பட்டுள்ள நமது விசுவாசிகள் அனைவருக்கும் தேவன் பரிபூரண சுகம் தர ஜெபிப்போம்.

**10**
**செப்டம்பர்**
**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. சப்னா ஓம் பிரகாஷ்

**ஜாலவ்ன்: கவித் ராகேஷ் ரத்திலால் & ஈகார் ரேஷ்மா மாருதி**

**துதிக்க:** இரண்டு கிராமங்களில் சுமார் 50 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 3 பேர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். நெப்புரா கிராமத்தில் புதிதாக ஆராதனை துவங்க தேவன் கிருபை செய்தார். மூன்று மாதங்களாக சுகவீனமாக இருந்த சுதேச ஊழியருக்கு தேவன் சுகமருளினார். விசுவாசிகளுக்கான கூட்டம் நல்ல முறையில் நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லால்புரா கிராமத்தில் சுவிசேஷத் திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சிப் பெற; ஜக்கோலி கிராமத்தில் இரண்டு மாதங்களாக சுகவீனப்பட்டிருக்கும் சோனம் என்ற விசுவாசிக்கு தேவன் சுகம் தர; டைபாயிடு காய்ச்சலிலிருந்து பார்வதியை தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

**தேசிய மிஷனெரிப்பயிற்சி மையம்**
**என். ராஜதுரை & பிரேமா**

**துதிக்க:** 10 பேர் தங்கள் மிஷனெரி பயிற்சியை நல்லமுறையில் முடித்து வெவ்வேறு பணித்தளங்களுக்கு அனுப்பப் பட்டுள்ளனர். தற்போது பயிற்சி பெறும் மிஷனெரிகள் ஜான்சி சிறுமியர் விடுதி பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய வாழ்விலும், படிப்பிலும் உதவி செய்து வருகின்றனர். மிஷனெரி பயிற்சி நிறைவு விழாவில் பங்குபெற்ற செவிலியரில் ஒருவர் ஊழியத் திற்கு தன்னை அர்ப்பணித்துள்ளார். பத்தேவாரா, காமட், சிமிரியா கேவத்டேரா, நார்கர்டேரா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்தேவாரா கிராமத்தில் சுவிசேஷம் கேட்ட ரஜினிஸ் கமானியா என்பவரின் இருதயத்தில் தேவன் கிரியை செய்ய; சாராயம் தயாரித்து வியாபாரம் செய்யும் நார்கர்டேரா கிராமத்தின் மக்கள் இரட்சிக்கப்பட; சிமிரியா கேவத்டேரா கிராமத்தில் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் மோகன் கேவத் குடும்பம் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பணித்தளம் சென்றுள்ள புதிய மிஷனெரிகளுக்கு தேவன் மொழி ஞானம் அருளி ஊழியத்தில் வல்லமையாய் பயன்படுத்தப்பட; விடுதியிலுள்ள கமலேஷ் எலும்பு காசநோயிலிருந்து சுகம் பெற; பொகராயன் ஆலயத்திற்கு எதிராக செயல்படும் அன்ஸு திரிவேதி, ஆகாஷ், ஆஷிஷ், அங்கித், சச்சின், யாஷ்விந்த் மற்றும் காவல் துறை அலுவலர் தீரேந்திர சிங் மற்றும் மதவாத இயக்கத்தைச் சேர்ந்த மனன்பஜ்ரங்கி ஆகியோர் தேவனால் தொடப்பட ஜெபிப்போம்.

***எப்பத்தா – திறக்கப்படுவாயாக***

*ராஜஸ்தான் மாநிலம், கோர்வாடா பணித் தளத்தில் ஒபாடா சபையின் மூப்பர் ஹன்ஜாகேராடியின் மகன் பிண்டாஸ் அவினாஷ் தன்னுடைய பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி மேல் தளத்திலிருந்து கீழே வீசப்பட்டு மயக்கமடைந்தார். விசுவாசிகளின் ஜெபத்திற்கு பின் மயக்கம் தெளிந்த அவரால் 6 நாட்கள் வரை பேச இயல வில்லை. மேலும் விசுவாசிகளின் தொடர் ஜெபத்தினால் தற்போது நன்றாக பேச தேவன் கிருபை செய்துள்ளார்.*

உபவாச ஜெபநாள்

## 11 செப்டம்பர் புதன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கஷிலி எக்டோ சோபி

செல்வி. மெர்சி MH சுவாஸி

# மத்தியப் பிரதேசம்

## தூல்கோட்

### கோபி கிருஷ்ணன் & மேனகா

**துதிக்க:** சிட்டியம் கிராமத்தைச் சேர்ந்த ஜித்தன் என்ற வாலிபனுக்கு வயிறு வீங்கிய நிலையில் ஒன்றும் சாப்பிட முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். எல்லா முயற்சிகளும் தோல்வியுற்ற நிலையில் அவரை ஆலயத்திற்கு அழைத்து வந்து ஜெபித்த போது தேவன் அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார். ஓடி கிராமத்தைச் சேர்ந்த அனிதா என்ற இளம் பெண் அசுத்தாவியினால் தாக்கப்பட்டு, கால்கள் சங்கிலிகளால் கட்டப்பட்ட நிலையில் ஜெபத்தின் மூலம் தேவன் பரிபூரண விடுதலையை தந்தார். விசுவாசிகள் மற்றும் ஊழியர்களாக 84 பேர் இணைந்து ஒரு நாள் உபவாசித்து தேசத்திற்காக ஜெபிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜெயராம் குடும்பத்தில் காணப்படும் பிரச்சனைகள் நீங்கி சமாதானம் நிலவ; தோன் கிராமத்தில் பஜன் நிகழ்ச்சியும், பந்தரி மற்றும் டான்டா கிராமங்களில் பெண்கள் கூடுகையும், டொமினியா கிராமத்தில் ஆத்தும ஆதாயப் பயிற்சியும் தடையின்றி நடைபெற; அம்பா கிராமத்தில் பிரான்சிஸ் மற்றும் அவரது மனைவி அசுத்தாவியின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

## கர்கோன்

### பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா

**துதிக்க:** 15 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அறிக்கையிட்டு சபையில் இணைந்துள்ளனர். சிலோட்டியா மற்றும் கரோடி கிராமங்களில் நடத்தப்பட்ட இரண்டு நாட்கள் உபவாச ஜெபத்தில் சுமார் 140 பேர் கலந்து கொண்டு ஜெபிக்க தேவன் உதவி செய்தார். 20 கிராமங்களில் பின்தொடர் பணி நடத்தப்பட்டது. அதில் ஆத்தும ஆதாயப் பயிற்சிப் பெற்ற மூப்பர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். துல்யா மற்றும் கெர்வாம் ஆகிய கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்க கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில்கட்டியா கிராமத்தில், மிகுந்த துன்பங்களை மட்டுமே சந்தித்து வரும் மெயந்தி பேனை தேவன் பலப்படுத்தி அவரது வாழ்க்கையை ஆசீர்வதிக்க; லோக்ரி கிராமத்தில் எதிர்ப்பினால் தடைப்பட்டுள்ள ஆராதனை மீண்டும் துவங்கப்பட; பிசாசின் பிடியினால் சிக்கித் தவிக்கும் லக்ஷ்மி மற்றும் ரீனா ஆகியோர் விடுதலை பெற ஜெபிப்போம்.

## *கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்...*

*இமாச்சல் பிரதேசம், நேர்வா பணித்தளத்தில் பங்கால் கிராம விசுவாசி நாராயணசிங் தன்னுடைய சேமிப்பை எல்லாம் எடுத்து வீடு கட்டத் துவங்கினார். ஊர் வழக்கப்படி வீடு கட்ட துவங்கும் போதும், பிரதிஷ்டை செய்யும் போதும் ஊராருக்கு மது விருந்து கொடுக்க வேண்டும். ஆனால் நாராயண சிங் 'அப்படிப்பட்ட தீய காரியத்தை நான் செய்ய மாட்டேன்' என்று சொல்லி மது வழங்க மறுத்துவிட்டார். ஊரார் யாரும் கலந்துகொள்ளாத நிலையில் விசுவாசிகள் யாவரும் ஒன்றுகூடி ஜெபித்தப்பின் வீடு கட்டத் துவங்கினார். கட்டுமானப் பணி இடையில் நின்று விடும் என்று ஊரார் சொல்லி வந்த நிலையில் நாராயணசிங் தன் வீட்டைச் சிறப்பாக கட்டி முடித்து, ஜெபத்துடன் பிரதிஷ்டையும் செய்ய தேவன் கிருபை பாராட்டினார். தேவனுக்கே மகிமை!*

**12**

**செப்டம்பர்**

வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேபல் கிறிஸ்டோபர்

திருமதி. இர்கார் ரேஷ்மா மாருதி

# பீஹார்

## கிழக்கு கங்கை பிராந்தியம்

### பாபு புஷ்பராஜ் & ரேச்சல் ஜாய்ஸ்

**துதிக்க:** கரியா, கட்லு, ஷியாம்பூர், தக்கரகோரி, ஹலிதிபாடி, பலியபாரா ஆகிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. சட்டாப்பூர் பணித் தளத்திலுள்ள அராஹா கிராமத்தில் விசுவாசிகளின் ஒற்றுமையினால் எதிர்ப்புகளை மேற்கொள்ள தேவன் உதவி செய்தார். வாசுதேவ் சாடாவின் மகள் பாம்புக் கடியிலிருந்து தேவனால் காப்பாற்றப்பட்டாள். இரவில் தூங்கிக்கொண்டிருந்த கஜல் குமாரியின் காதில் பூச்சி நுழைந்து வலியினால் துடித்தபோது எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார். தலையிலிருந்து கால்வரை கட்டியினால் கஷ்டப்பட்ட 11 மாத குழந்தை ரீனு குமாரியை தேவன் சுகமாக்கினார். இரத்த வாந்தியினால் அவதியுற்ற கீதா தேவி சுகம் பெற்று விசுவாசத்தை அறிக்கையிட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மஹாதீப்பூர் கிராமத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் நமது விசுவாசிகள் பொது வழியில் செல்வதை தடைசெய்யும் கிராமத்தினர் மனந்திரும்பி இயேசுவின் அன்பினால் தொடப்பட; 5 ஆண்டுகளுக்கு முன் வேலை நிமித்தம் மஹாராஷ்டிராவுக்கு சென்று இதுவரை திரும்பி வராத அபிஷேக் குமார் பத்திரமாக வீடு திரும்ப; தன் தாயை இழந்துள்ள மிஷனெரி திரு. ஆனந்தன் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் அருள; நேப்பாளத்திலிருந்து வந்து விசுவாசிகளை தவறான பாதையில் வழிநடத்துவோர் மனந்திரும்ப; ராஜா என்ற நமது விசுவாசி வேலை நிமித்தமாக இரண்டு பேரை பஞ்சாப் மாநிலத்திற்கு அழைத்து சென்றார். அதில் ஒருவர் அதிக குடியினால் மரித்துவிடவே கிராமத்தினர் விசுவாசி ராஜாவை கொலை செய்வோம் என்று மிரட்டி வருகின்றனர். தேவன் ராஜாவை பாதுகாக்க ஜெபிப்போம்.

## அரரியா

### ஜென்னிஸ் & சுகந்தி புஷ்பம்

**துதிக்க:** கீதா தேவி, கிருஷ்ண குமார் ஆகியோர் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். வேலை நிமித்தமாக பிற மாநிலங்களுக்கு சென்றிருந்த கியான் ரிஷிதேவ், பல்வீர்குமார், முண்டன் ரிஷிதேவ் ஆகியோரை பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் பத்திரமாக வீடு திரும்ப தேவன் உதவி செய்தார். விசுவாசி மம்தா தேவியின் மகள் பூஜா தேவிக்கு நடுஇரவில் பிரசவ வலி ஏற்பட்டபோது ஜெபத்தின் மூலம் தேவன் சுகப்பிரசவத்தில் குழந்தை பிறக்கும்படி செய்தார். கடுமையான காய்ச்சல் மற்றும் வயிற்று வலியிலிருந்து சந்திரிகா தேவிக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுனில், சஞ்சய், மகேஷ், காஜல், ராணிகுமாரி, மந்தோன், ரிஷிதேவ், அசோக், சுரஜ், ராஜேஷ், ரிங்கி, சாம்சுந்தார் ஆகியோர் தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கையிட; ஆண்டவருடைய அற்புதத்தை ருசித்தும் பின்மாற்றம் அடைந்துள்ள நாராயண் சாடா குடும்பம் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள மற்றும் மூட பழக்கங் களுக்கும், போதைப் பழக்கங்களுக்கும் அடிமைப்பட்டுள்ள முசாஹர் இனமக்கள் இரட்சிக்கப்படவும், அரசாங்கத்தின் மூலம் கிடைக்கும் சலுகைகளை பெற்றுக்கொள்ள நிலவும் தடைகள் நீங்கவும் ஜெபிப்போம்.

**13 செப்டம்பர் வெள்ளி**

# ஜார்க்கண்ட்

## கோபிகந்தர்

### ஜாண் தினேஷ் & பின்னி ஞானம்

**துதிக்க:** 76 புதிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டன. 2 புதிய கிராமங்களில் இரவுக் கூட்டங்களும், 4 இடங்களில் உபவாச ஜெபமும் நடைபெற்றன. பிப்ரா கிராமத்தில் 9 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைந்தனர். விபத்தில் சிக்கிய பாஸ் டெஹ்ரியை மரணத்தி லிருந்து தேவன் பாதுகாத்தார். சதீஷ் டெஹ்ரி மற்றும் மிகா குமாரி மஞ்சள் காமாலை நோயிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனர். மழை நாட்களில் தேள் மற்றும் பாம்புக் கடியிலிருந்து விசுவாசிகளை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சூனியக் கட்டுகளினால் நடக்க முடியாமல் கஷ்டப்படும் ரிங்கு டெஹ்ரி, வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சோட்டா லக்கு டெஹ்ரி மற்றும் கல்லீரல் பாதிப்பிலிருந்து சிபு டெஹ்ரி ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; லக்கன், பாபுலால், வீரேந்தர் ஆகிய சபை மூப்பர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பினை உண்மையும் உத்தமத் தோடும் நிறைவேற்றவும், ஆவிக்குரிய வாழ்வில் வளரவும்; சுவிசேஷ ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மோஹன், காலு, அஜய், புதுனா, அனில், கார்த்திக், டெபு, லக்கிராம், கயலால் ஆகியோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; விசுவாசத்திற்குள் வந்துள்ள சோனியா மற்றும் லக்ஷ்மி ஆகியோர் தங்கள் வாழ்வாதாரத்திற்காக சாராயம் தயாரிக்கும் நிலை மாற; முர்ஜா, சோலாபத்தர், சிருடி, ஓர்மு, குண்டாபாஹாடி, கமலகொச்சா ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## ராஜ்மஹால் பிராந்தியம்

### ஆல்பர்ட் பிரபாகரன் & முருகம்மாள் எஸ்தர்

**துதிக்க:** 18 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 34 கிராமங்களில் திரைப்பட ஊழியம் நடத்த தேவன் உதவி செய்தார். 4 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிட்டுள்ளனர். ஜிக்டியா கிராம விசுவாசிகள் தங்கள் கிராமத்தில் ஆலயம் கட்ட தங்கள் சொந்த பணத்தைக் கொண்டு நிலம் வாங்கியுள்ளனர். சிபுபஹாடியாவை விஷபாம்புக் கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். எதிர்ப்பு நிறைந்த அல்ஹர் கிராமத்தில் விசுவாசியின் திருமணம் தடையின்றி நடைபெற்றது. குடல்வால் பாதிப்பினால் ஆபத்திலிருந்த ரிங்கு தேவிக்கு அறுவை சிகிச்சையின் மூலம் குழந்தை பெற்றெடுக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷ ஊழியத்திற்கு தடையாகயிருக்கும் மந்திரவாதிகள் மனந் திரும்ப; விபத்தினால் மரணத்தருவாயி லிருக்கும் சுனில் காசிக்கு தேவன் அற்புதம் செய்ய; பத்தர்காமா பணித்தளத்தில் கிறிஸ்தவர்களுக்கான சொந்த கல்லறைத் தோட்டம் கிடைக்க தேவன் உதவி செய்ய; சிறுவயதில் திருமணம் மற்றும் விவாகரத்தினால் பாதிக்கப்படும் தேவனை அறியாத மால்தோ மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் 6 குடும்பத்தினர் கிறிஸ்துவை அறிக்கையிட; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ரூப்சந்த், சுனில் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகம்தர ஜெபிப்போம்.

## 14 செப்டம்பர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் டேவிட் M.

### பர்ஹுர்வா

**மல்லா வித்யாசாகர் & தீபிகா ராணி பானி**

**துதிக்க:** பிசாசின் பிடியிலிருந்து பபுலு ஷாவின் மனைவி மற்றும் கங்கியா தேவி ஆகியோர் ஜெபத்தினால் விடுதலை பெற்றனர். உஷா தேவியை தோல் வியாதி மற்றும் வயிற்றுவலியிருந்து தேவன் சுகப்படுத்தினார். ஆலயம் கட்ட நிலம் வாங்க தேவன் கிருபை பாராட்டியதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிட்டு கல்லீரல் பிரச்சனையிலிருந்தும், துளாரி தேவி நீரிழிவு நோயிலிருந்தும் சுகம்பெற; சபை மூப்பர்கள் மத்தியில் தேவன் ஒருமனப்பாட்டைக் கட்டளையிட; கர்ப்பமாயிருக்கும் பல்லவி தேவிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; பபுலு ஷா குடும்பம் விரைவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; புது விசுவாசியான பாக்கிய ஷா ஆவிக்குரிய வாழ்வில் வளர ஜெபிப்போம்.

### பதர்காமா

**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** காசிசாக் கிராமத்தில் புதிதாக இரவுக் கூட்டம் துவங்க தேவன் கிருபை பாராட்டினார். டாடாசர்யா, மலானி, நாகபூரா, பொளசி ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு கைப்பிரதிகள் விநியோகம் செய்ய தேவன் தந்த திறந்த வாசலுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மயாகஞ்ச் கிராமத்தில் சிறுநீரகப் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள விசுவாசி சம்புராயின் 8 வயது மகன் மனிஷ்-க்கு தேவன் இரக்கம் பாராட்ட; பிசாசின் பிடியிலிருந்து பிரமானந்த தாஸ் விடுதலை பெற; கஜு, பிரியங்கா, சாண்டோ ஆகியோருக்கு தேவன் சுகப்பிரசவத்தைக் கட்டளையிட; காசிசாக் என்ற புதிய கிராமத்தில் அற்புத அடையாளங்களின் மூலம் திரளான ஆத்துமாக்களை தேவன் எழுப்பித் தர ஜெபிப்போம்.

### ஹன்ஸ்டிகா

**செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி**

**துதிக்க:** நிப்போனியா கிராமத்தில், விஷப் பாம்புக் கடியிலிருந்து விசுவாச வாலிபனை தேவன் பாதுகாத்தார். கடந்த மூன்று வாரங்களாக இருமல் மற்றும் காய்ச்சலினால் கஷ்டப்பட்டு வந்த ஜமுனியா சபை மூப்பர் மணிக்லாலுக்கு ஜெபத்தினால் தேவன் பரிபூரண சுகமருளினார். ஏர் உழும் நேரத்தில் முரண் பிடித்து நின்ற இரண்டு காளை மாடுகளுக்காக சபை மூப்பர் முழுங்கால்படியிட்டு ஜெபிக்கவே மாடுகள் அவரின் கட்டளைக்குக் கீழ்படிந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இனம்புரியாத நோயினால் பாதிக்கப்பட்டு, வீட்டிலுள்ள பொருட்களை விற்று மருத்துவம் செய்தும் பயனற்ற நிலையில் ஜீவனுக்காக போராடிக் கொண்டிருக்கும் இளம் பெண் ஸ்ரீமதியின் வாழ்க்கையில் தேவன் அற்புதம் செய்ய; சப்பாராம் கிராமத்தில் விரைவில் ஆலயம் கட்ட வேண்டுமென்று ஊக்கத்தோடு ஜெபித்து வரும் விசுவாசிகளின் ஜெபத்தை தேவன் கனப்படுத்த ஜெபிப்போம்.

## 15 செப்டம்பர் ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. வசாவா பாங்சிங் மௌல்யா
திரு. பால் தயாசிங் A.Y.
திருமதி. சாவித்திரி குமார்
திருமதி. எமிமாள் திலக்
செல்வி. ஷலோமி மால்தோ

### லால்மட்டியா

**அமரேந்திரன் & சுவேதா**

**துதிக்க:** 10 பேர் தங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்று கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுக்கொண்டனர். விஷப் பாம்புக் கடியிலிருந்து தெஸ்மாய் பெஸ்ரா ஜெபத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டார். ஐந்து வருடங்களாக தூக்கமின்றி கஷ்டப்பட்டு வந்த சுனில் மராண்டி ஆலயத்திற்கு வந்து ஜெபித்த போது நல்ல நித்திரையை தேவன் அவருக்கு கட்டளையிட்டார். மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருந்த லக்கன் முர்மு விசுவாசிகளின் ஜெபத்தினால் பரிபூரண சுகம் பெற்றதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுதேச ஊழியரின் மனைவி சோன்மஸ் ஹன்ஸ்தா மனநோயிலிருந்து விடுதலை பெற; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் எக்காரி கிராமத்தில் நண்பர்களுடன் வந்து சுவிசேஷத்திற்கு இடையூறு விளைவிக்கும் சிஜ் கிராமத்தைச் சேர்ந்த பிரதான் என்பவர் இயேசுவின் அன்பினால் தொடப்பட; சிஜ் கிராமத்தில் பிரதீப் காச நோயிலிருந்து சுகம்பெற; கால் எலும்பு முறிவு ஏற்பட்டு நீண்ட நாட்களாக படுக்கையிலிருக்கும் பிரதான் விரைவில் குணமடைய ஜெபிப்போம்.

### கங்குபாடா சிறுமியர் விடுதி

**ஈவ்லின் பாக்கியா, சுஷாஜிதா சேனாபதி, எஸ்தர் சாவித்ரி**

**துதிக்க:** 6 மாணவிகளுக்கு ஜி.என்.எம். படிக்க தேவன் கிருபை செய்துள்ளார். அன்னா மற்றும் சோனாலியா காச நோயிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். அரசாங்க மருத்துவ மனையின் உதவியுடன் கிராம மக்களுக்காக மருத்துவ முகாம் நடத்த தேவன் உதவி செய்தார். விடுதியிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வழியில் இருந்த பெரிய பள்ளத்தை கிராம மக்கள் ஒன்றிணைந்து மண்ணால் நிரப்ப கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கட்டப்பட்டு வரும் புதிய ஆலயம் விரைவில் சிறப்பாய் கட்டி முடிக்கப்பட; ரூத் தன்னுடைய மருத்துவ செவிலியர் படிப்பை சிறப்பாக முடிக்க தேவன் உதவி செய்ய. தீயப் பழக்கங்களில் சிக்கியுள்ள விடுதி மாணவிகளின் பெற்றோர்கள் அதிலிருந்து விடுதலைப் பெற்று பிள்ளைகளுக்கு முன்மாதிரியாய் ஜீவிக்க; இடையூறின்றி நமது விடுதியை நடத்த கிராம மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்க; அடிக்கடி பிரச்சனை செய்து வரும் பவுலோஸ் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; பழைய மாணவிகளுக்காக நடத்தப்படும் கூடுகையின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்போம்.

**16**
**செப்டம்பர்**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஹேனா குமாரி கன்சல்வ்ஸ்

# மேற்கு வங்காளம்

## கங்காராம்பூர்
### தீஹே ஜேம்ஸ் & சரணி

**துதிக்க:** 5 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் இணைந்துள்ளனர். 17 கிராமங்களில் நடத்தப்பட்ட இரவுக் கூட்டங்களில் ஏராளமானோர் கலந்து கொண்டு நமது விசுவாசிகளின் அழகிய பாடல்கள் மற்றும் சாட்சிகளைக் கேட்டு சென்றனர். 9 இடங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டது. புதிதாக ஒரு ஆராதனைக்குழு தொடங்க கிருபை பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் சுஜித் கிஸ்கு, மோஹிலால் டுடு, டோபாஸ் முர்மு, மங்கல் ஹன்ஸ்தா ஆகியோர் விரைவில் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள; பானாபோகார் கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; சபை மூப்பர்களான சுவாப்பன் மார்டி, சாமுவேல் ஹெம்ரோம், தினேஷ் பாஸ்கி, மோட்டு சோரன், மங்கல் பெஸ்ரா, சுனிபார் முர்மு, பிரதான் கிஸ்கு, சஹத் மார்டி, லலிதா முர்மு ஆகியோர் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து சபை மக்களை தேவ பக்தியில் வழிநடத்தப்பட ஜெபிப்போம்.

### பாலூர்ஹட்: ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின், ரஞ்சன்

**துதிக்க:** பெலைன் கிராமத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருகின்றனர். 15 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட போது அநேகர் ஆர்வத்துடன் கேட்டதோடு ஜெபித்தும் சென்றனர். அஹ்மத்பூரில் ஆராதனைக் குழு புதிதாக துவங்கப்பட்டுள்ளது. சீதா மஞ்சள் காமாலையிலிருந்தும், டோலா சோரன் பாம்புக் கடியிலிருந்தும், லோபானி கிஸ்கு வைரல் காய்ச்சலிலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொபர்பாடா மற்றும் ஏக்மலி கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை தேவன் அருள; டொாங்கி, சக்ரனிமா, ராதே நகர் மற்றும் டோன்சி கிராமங்களில் ஆலயம் கட்ட எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயுள்ள லத்திகா ஹெம்ரோம், ஜமீன் கிஸ்கு, பூட்டு டுடு, ராஜ்குமார் சோரன் ஆகியோருக்கு காணப்படும் தடைகள் நீங்க; தொடர்ந்து நடைபெற்று வரும் பெண்கள் கூடுகை, வாலிபர் முகாம் ஆகியவை தடையின்றி நடைபெற; ஆலய ஆராதனையில் வாலிபர்கள் உற்சாகத்துடன் பங்குபெற ஜெபிப்போம்.

## *யெகோவா ஷாலோம்!*

*மகாராஷ்டிராவிலுள்ள இகத்புரி பணித் தளத்தில் மனிஷா கீழே விழுந்ததினிமித்தம் மிகவும் பெலவீனப்பட்டு வீட்டில் எந்தவொரு வேலையும் செய்ய முடியாமலும், இரண்டாவது குழந்தையைப் பெற்றுக்கொள்ள முடியாத தினாலும் தன் கணவரோடு எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டும், சமாதானமின்றி வாழ்ந்து வந்தார். அவருக்காய் தொடர்ந்து ஜெபித்து வந்த போது அவள் குழந்தை பாக்கியம் அடையவும், தன் கணவரோடு சமாதானமாய் வாழ்ந்தும் வருகிறார். தேவனுக்கு நன்றி!*

## 17 செப்டம்பர்
செவ்வாய்

### பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** 6 பேர் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபையில் இணைந்தனர். இக்கட்டான சூழ்நிலையில் தேவனை நோக்கி ஜெபித்த மரியம் டுடுவுக்கு சுகப் பிரசவத்தில் குழந்தைப் பிறக்க தேவன் கிருபை செய்தார். விசுவாசத்தினிமித்தம் கிராமத்தினரால் ஒதுக்கி வைக்கப்பட்ட சபோல் ஹெம்ரோம் மரித்த போது கிராமத்தினர் யாரும் உதவி செய்ய வராத நிலையில் நமது விசுவாசிகள் ஒன்று கூடி அடக்க ஆராதனையை நல்லமுறையில் நடத்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரங்கா, தலிக்கட் கிராமங்களில் விரைவில் ஞாயிறு ஆராதனைகள் துவங்கப்பட; உத்தர்கர்மா மற்றும் சல் கோனா கிராம விசுவாசிகள் அனைவரும் ஆர்வமுடனும், பக்தியுடனும் ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்ள; உலாந்தர், நீம்தங்கா, உத்தர்கர்மா மற்றும் சல்கோனா கிராமத்து சபை மூப்பர்கள் ஆவிக்குரிய வழியில் சபையை நடத்திட; பல வருட ஜெபத் திற்கு பின் கர்ப்பமாகியுள்ள சுமித்தராவுக்கு தேவன் சுகப்பிரசவம் அருள ஜெபிப்போம்.

### இட்டாஹார்: அஸ்தபான் ஆதித்திய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** 6 பேர் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 10 கிராமங் களில் முதன்முறையாக இயேசு திரைப்படம் மூலம் நற்செய்தி அறிவிக்கவும், கைப்பிரதி ஊழியம் செய்யவும் தேவன் கிருபை செய்தார். சத்சங் மற்றும் இரவு கூட்டங்களில் திரளானோர் கலந்து கொண்டனர். சிறு ஜெபக்குழு தலைவர்களுக்கானப் பயிற்சி சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சத்சங் கூடுகையில் பங்கு பெற்ற 63 நபர்களும், இயேசு திரைப்படம் பார்த்த 165 நபர்களும் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; நடைபெறவிருக்கும் பயிற்சி முகாம்கள் மற்றும் வெளிப்புற நற்செய்தி ஊழியங்கள் நல்ல பலனைத் தர; சுதேச ஊழியர்கள் சுஜன் ஹெம்ரோம் மற்றும் ஹிராமணி ஆகியோருக்கு தேவன் குழந்தைப் பாக்கியம் அருள; கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் 26 பேரும் கிறிஸ்துவில் ஆழமாய் வேரூன்றி வளரவும், தடைகள் நீங்கவும் ஜெபிப்போம்.

### மால்டா
### உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** இரண்டு இடங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது. 56 பேருக்கு தனிப்பட்ட முறையில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். பாம்பு கடித்து மரிக்கும் நிலையிலிருந்த சஜோதிக் பஹாரிக்காக விசுவாசிகள் ஒருமனப்பட்டு ஊக்கத்தோடு ஜெபித்தபோது அற்புதமாய் அவரது ஜீவனை தேவன் பாதுகாத்தார். மிகுந்த சரீர பெலவீனத்தோடு இருந்த ஸ்வாபன் பஹாரியா ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் சுர்ஜா பஹாரியா குடும்பத்தினர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; ஜடாகுண்டி கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயக் கட்டுமானப்பணிகள் விரைவில் முடிவடைய; பைநாச்சி சபை விசுவாசிகள் விசுவாசத் திலும், தேவனுக்குரிய பக்திவைராக்கியத் திலும் வேரூன்றி வளர; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ரோப்சந்த் மற்றும் சுனில்-க்கு தேவன் பரிபூரண சுகமருள; பிச்சமாலா கிராமத்தில் சுத்தமான குடிநீரின்றி பலவிதமான நோய்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கு சுத்தமான குடிநீரை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

உபவாச ஜெபநாள்

# 18 செப்டம்பர்

புதன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் ஸ்டீபன் Y.

## ஜாம்போனி

### இப்ராயிம் மாலி & புரோசன்சிதா

**துதிக்க:** ரோகிடா கிராமத்தில் ஒருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். மகுவாபால், அக்வாபாத், குசும்கட்லி, அங்கார் குனியா, பினாசோலே மற்றும் சங்ராம் கிராமங்களில் முதன்முறையாக நற்செய்தி அவிக்க தேவன் கிருபை செய்தார். பினாசோலே கிராமத்தில் ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று கைப்பிரதி கொடுத்து, நற்செய்தி அறிவிக்கும் போது அநேகர் அவர்களின் இல்லத்திற்குள் அழைத்து ஜெபிக்க கேட்டுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரோகிடா கிராமத்தில் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பிரதிகா ஹன்ஸ்தாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அவரது குடும்பத்தினர் மனந்திரும்பி இயேசுவின் அன்பினால் தொடப்பட; ராம்நகர் பகுதியிலுள்ள ஆலய நிலப்பிரச்சனை விரைவில் முடிக்கப்பட; விசுவாசி ராம்ராஸ் ஹெம்ரோம்-ஐ இழந்திருக்கும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; நீண்ட நாட்களாக சுகவீனத்தினால் படுத்த படுக்கையாயிருக்கும் பியுடி பூசனுக்கு தேவன் பரிபூரண சுகம்தர ஜெபிப்போம்.

### தபான்: ஹரமோகன் பிரபுதாஸ் நாயக் & சூசம்மா

**துதிக்க:** 11 பேர் இருளான வாழ்விலிருந்து தேவனுடைய வெளிச்சத்திற்குள் பிரவேசித்துள்ளனர். தன் குடும்பத்தினரை கிறிஸ்துவ விசுவாசத்தை விட்டுவிடும்படி வற்புறுத்தி வந்த சாமால் சோரன், தன் வியாதியினின்று ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதால் தற்போது இயேசு கிறிஸ்துவே தெய்வமென்று சாட்சி பகிர்ந்து வருகிறார். இரத்த வாந்தியிலிருந்து புல்மணி மராண்டிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். தாஸ்வி, அன்டோல் மற்றும் போனாஹர் கிராமங்களில் கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தாயிருப்போருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நேகம்பா கிராமத்தின் ஞாயிறு பள்ளி ஆசிரியர் சாவித்ரி மார்டியின் நெஞ்சிலுள்ள கட்டி குணமாகி, மீண்டும் சிறுவர் ஊழியத்தை உற்சாகமாய் செய்ய; ஜெய் தேவ் என்ற 12 வயது சிறுவனின் கழுத்திலுள்ள கட்டி மறைய; ஜல்ஹர் சோரன் செவி கேட்கும் திறனை மீண்டும் பெற்றுக்கொள்ள; ராஜ் மராண்டி குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.

## சத்தீஸ்கார்

### தப்காரா: அருண்குமார். ஜி & சாரதி

**துதிக்க:** 4 புதிய கிராமங்களில் சுமார் 50 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். கெர்ஜி கிராமத்தில் மது என்ற சகோதரி தேவன் மீதுள்ள தன் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளார். கர்கட்டா, புன்மேரா, பெர்ஜி ஆகிய பகுதிகளில் தொடர்ந்து இரவு பஜன் நடத்தவும், புதிய மக்கள் வாஞ்சையோடு சத்தியத்தைக் கேட்கவும் தேவன் கிருபை செய்தார். உமன்சியா பகுதியில் புதிதாக துவங்கப்பட்ட ஆராதனையில் அநேகர் கலந்து கொள்கின்றனர். செம்மர் கச்சார் கிராமத்தில் நிறுத்தப்பட்ட ஆராதனை மீண்டும் துவங்கப்பட உதவி செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கெர்ஜி சபையின் மூத்த விசுவாசியான பஜன் அவர்களின் மனைவி மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெற; இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பரத்பாரா, புன்மேரா மற்றும் மஹாதேவ்முடா ஆகிய கிராம சபைகள் சீரமைக்கப்பட; தப்காரா பகுதியில் வாலிபர்கள் தேவனால் சந்திக்கப்பட; மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ள சசி மற்றும் பிரத்திமாவுக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## 19 செப்டம்பர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. குளோரி ராபர்ட் வில்லியம்
திரு. பிரத்யூஷ் நாயக்

### வாட்ராஃப் நகர்
**பூபதி & பவுலின் மேரி**

**துதிக்க:** 26 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். லாமேரி என்ற கிராமத்தில் ஒருவருடத் திற்கு பின் மீண்டும் ஆராதனை துவங்க தேவன் கிருபை பாராட்டினார். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கொய்வா கிராம ஆராதனை தடையின்றி நடைபெறவும், தொடர்ந்து 20 பேர் அதில் பங்கு பெற்று வருகிறதற்காகவும் தேவனைத் துதிப்போம்

**ஜெபிக்க:** பிரதாப்பூர், ராஜ்பூர் மற்றும் வாட்ராப் நகர் ஆகிய மூன்று பணித்தளங் களிலுள்ள அனைத்து மக்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட; சுவிசேஷத் திற்கு விரோதமாய் செயல்படுவோர் மனந்திரும்ப; எதிர்ப்புகளின் மத்தியிலும் விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; விசுவாசத்தில் பின் மாற்றம் அடைந்த விசுவாசிகள் மீண்டும் தேவனிடம் திரும்ப; பிரசவத் திற்கு காத்திருக்கும் மிஷனெரியின் மனைவிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள ஜெபிப்போம்.

## ஒடிசா
### ஜகன்நாத்பூர்
**பாசுதேவ் மால்தோ &**
**பசந்தி மால்தோ, சுரேஷ் மால்தோ,**
**ஆபிரகாம் எஸ். & அலீஸ் ஷீபா**

**துதிக்க:** 18 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். நடைபெற்ற நற்செய்தி பெருவிழாவில் 12 கிராமங் களிலிருந்து சுமார் 3896 பேர் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட தேவன் உதவி செய்தார். டோன்டா சபையில் தேசத்தின் எழுப்புதலுக்காக நடத்தப்பட்ட ஒருநாள் உபவாச ஜெபத்தில் திரளானோர் பங்கு பெற்று ஊக்கமாக ஜெபித்தனர். அடர்ந்த காடான புகழ்பெற்ற சாரந்தா காட்டிலுள்ள ஜோஜோகுட்டு கிராமத்தைச் சேர்ந்த லக்ஷ்மண் கரீன் என்பவருக்கு நற்செய்தி அறிவிக்க தேவன் உதவி செய்தார். அவரும் கிறிஸ்துவைப் பற்றி அறிய ஆவலாய் உள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய கிராமங்களில் நற் செய்தியை அறிவிக்க திட்டமிட்டுள்ள டோன்டா, ரெபல்ட்வா, பரஜாம்டா மற்றும் மஹாதிசா திருச்சபை விசுவாசிகளின் வாஞ்சையையும், முயற்சிகளையும் தேவன் ஆசீர்வதிக்க; ரெபல்டவா, ஜாமுனி, துராய்சாய், பரஜாம்டா, மற்றும் புருசா சபைகளில் நடக்கவிருக்கும் சபை மூப்பர்கள், வாலிபர்களுக்கான ஆத்தும ஆதாயப் பயிற்சியில் அனைத்து சபை மூப்பர்கள், விசுவாசிகள் தவறாமல் பங்கு பெற; பிசாசின் தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ள சுனில் பாரி, பாசுதேவ் பிஸ்வா மற்றும் காச நோயினால் கஷ்டப்பட்டு வரும் ஜக்மோகன் ஆகியோர் பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.

**20**
**செப்டம்பர்**
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜோஹன் மால்தோ

## தேன்கனல்
### அசோக் நாயக் & சுரபி நாயக்

**துதிக்க:** 10 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கை யிட்டனர். ஜாம்லி, அல்காபட்னா, குத்து கட்டு, அலான்ஸ் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். தலாமுண்டா என்பவர் கால் வீக்கம் மற்றும் வலியிலிருந்து விசுவாசிகளின் ஜெபத்தினால் சுகம் பெற்றார். மம்தா அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் வல்லமை யினால் விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் துரா புர்த்தி, பஜரா முண்டா, பங்கஜ் முண்டா, ராஜு முண்டா, ஜெயந்தி முண்டா ஆகிய குடும்பங்கள் விசுவாசத்தில் வேரூன்றி வளர்ந்து, இயேசுவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட; விசுவாசி லில்லிக்கு ஏற்படும் வயிற்று வலியிலிருந்து தேவன் பரிபூரண சுகம்தர; பலான் ஹன்ஸ்தாவுக்கு ஏற்பட்ட கால் எலும்பு முறிவு விரைவில் குணமாக; பங்கால் முண்டா காச நோயிலிருந்து பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.

## ஜஷிப்பூர்: சாமுவேல் ஜே. & ஹவிலா பரமானந்த், அரவிந்த் குமார் & ஹெலன் மரியம்

**துதிக்க:** 13 பேர் இயேசுவே மெய்யான தெய்வமென்று அவரை விசுவாசித்து அறிக்கையிட்டுள்ளனர். காட்டுக்குள் காணாமல் போன விசுவாசி மனோஜ் சிர்காவின் ஆடுகள் பத்திரமாக திரும்பி வர தேவன் உதவி செய்தார். ஊழியத் திற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த நமது சுதேச ஊழியரின் பெற்றோர் மனந் திரும்பி அவருடன் சமாதானமாய் இருக்க தேவன் கிருபை செய்தார். நடக்க முடியாமலிருந்த ராம் புர்த்தி ஆலயம் வந்து ஜெபித்த போது தேவன் அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார். லம்பகுடா கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பங்கிலூ புர்த்தி, ராம்சந்த்ர புர்த்தி ஆகியோர் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஹரி புர்த்தி தேவனால் சந்திக்கப்பட; நமது விசுவாசிகளின் நிலத்தில் நல்ல விளைச்சலை தேவன் கட்டளையிட; நீண்ட நாட்களாக கால் வலியினால் கஷ்டப்படும் துரம் குன்டுயா, கண் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள சுருக்கு முனி, மனநிலை பாதிக்கப் பட்டுள்ள சாகர் புர்த்தி, கழுத்து பிடியினால் கழுத்தை திருப்ப முடியாமல் நீண்ட நாட்கள் அவதியுற்று வரும் குருவாரி ஆகியோர் கர்த்தரால் சுகம்பெற; ஜஷிப்பூர் விடுதியில் படித்து வரும் அனைத்து மாணவர்களும் சிறந்த முறையில் படிப்பிலும், ஆவிக்குரிய வாழ்விலும் முன்னேற ஜெபிப்போம்.

**21**
**செப்டம்பர்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பிரசாந்த குமார் K.
திரு. எபினேசர் சாமுவேல்

### ரிமுலி: சங்கர் பி. & ஜெலின்

**துதிக்க:** 3 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். சொய்பங்கா கிராமத்தில் விசுவாசி அஜய் முண்டாவின் தாத்தா இறந்த போது எவ்வித அசம்பாவிதங்களின்றி நல்லமுறையில் அடக்க ஆராதனை நடத்த தேவன் கிருபை செய்தார். சோகினிபோசி கிராமத்தில் எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் இருக்க தேவன் உதவி செய்துள்ளார். நொய்பங்கா கிராமத்தில் விசுவாசி திருமுண்டாவை, 4 நாட்களாக கிறிஸ்துவை மறுதலிக்கச் சொல்லி வற்புறுத்தி வந்த மந்திரவாதிகளிடம் "என்னை கொன்றுப் போட்டாலும் கிறிஸ்துவை மறுதலிக்கமாட்டேன்" என்று கூறி உறுதியாயிருந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஐமுனி மற்றும் குன்டனியா கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகள் விரைவில் கட்டி முடிக்கப்பட; சிறுவர்கள் மத்தியில் நடைபெற்று வரும் ஊழியங்கள் தடையின்றி மேலும் சிறப்பாய் நடைபெறவும், அர்ப்பணமுள்ள வாலிபர்கள் எழும்பவும்; ஜும்பூரா பகுதியில் ஆராதனை நடத்தவும், புதிய கிராமங்களை சுவிசேஷத்தினால் சந்திக்கவும் அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; ஆலயத்திற்கு வந்து சுகம் பெற்று சென்றவர்கள் தொடர்ந்து ஆலய ஆராதனையில் பங்கு பெற்று தேவனை முழுமனதுடன் விசுவாசித்து ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

### ராய்ரங்பூர்: குணா சந்திர பாய்க் & கிருட்டாஞ்சலி பாய்க்

**துதிக்க:** டுங்கராபானி கிராமத்தில் விசுவாசிகளின் முகாம், லுகாஸியா கிராமத்தில் மூப்பர்களுக்கானப் பயிற்சி ஆகியவை நடத்த தேவன் கிருபை செய்தார். சுரஜ் சர்தார், ராஜேஷ் ஹெம்ரோம் ஆகியோர் வாகன விபத்திலிருந்து கர்த்தரால் காப்பாற்றப்பட்டனர். ஹோ இன மக்கள் மத்தியில் நற்செய்திக்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். மிஷனெரியின் மகன் நல்லமுறையில் சி.ஏ. படிப்பினை முடிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் 11 குடும்பங்களும் தடையின்றி கிறிஸ்துவின் மந்தையில் இணைய; காபிரியேல் கம்ராஜ் என்ற ஒரு வயது சிறுவனுக்கு நடக்கவிருக்கும் இருதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தேற; குச்சிபால் மற்றும் சுனாபாடா கிராமங்களில் விசுவாசிகளுக்கும், கிராமத்தினருக்கும் இடையிலுள்ள பிரச்சனை சுமூகமாக முடிய; வரும் நாட்களில் நடைபெறவுள்ள கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி, மூப்பர் பயிற்சி ஆகியவை சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

**22**
**செப்டம்பர்**
ஞாயிறு

# குஜராத்

## சொரம்பா & கடோத்

**புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா**

**துதிக்க:** கடோத்தில் புதிய ஆராதனைக்குழு துவங்க தேவன் கிருபை செய்தார். ஜட்பூரில் முதன்முறையாக நடத்தப்பட்ட இரவுக் கூட்டத்தில் சுமார் 25 பேர் கலந்து கொண்டனர். ரகிபூரா மற்றும் செரிமா கிராமங்களில் நடத்தப்பட்ட பெண்களுக்கான சிறப்புக் கூடுகையில் திரளான பெண்கள் கலந்து கொண்டு நற்செய்தி கேட்டனர். சேவானி கிராமத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த செந்தல் பேனை விஷப் பாம்பிடமிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கஸ்வர் கிராமத்தைச் சேர்ந்த சாவித்திரி பேன் புற்றுநோயிலிருந்து பரிபூரண சுகம்பெற; ஹரிபூரா கிராமத்தில் இரவுக் கூட்டம் நடத்த இடம் கொடுத்து வந்த கிரண்பாய், மதத்தீவிரவாதிகளின் அச்சுறுத்துதலினால் இடம் தர மறுத்துவிட்டார். எதிர்ப்பாளர்கள் தேவனின் அன்பினால் தொடப்பட; ஜசிமோரா கிராமத்தில் இறந்தவரை அடக்கம் செய்வதில் விசுவாசிகளுக்கும், கிராம மக்களுக்கும் இடையே நிலவும் பிரச்சனை சுமூகமாக தீர்க்கப்பட; கிம்பூரா கிராமத்தில் ஆலய ஆராதனையில் அனைத்து விசுவாசிகளும் குடும்பத்துடன் கலந்து கொண்டு தேவனை ஆராதிக்க ஜெபிப்போம்.

## போடோலி: ஏசுபாபு & உஷா

**துதிக்க:** வேராமத்தா கிராமத்தில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகையில் சுமார் 50 பேர் கலந்து கொண்டு சக மக்களின் இரட்சிப்புக்காக ஜெபித்தனர். சனோலி கிராம மக்கள் தங்கள் கிராமத்தில் ஜெபக் கூட்டம் நடத்த நமது ஊழியர்களை அழைத்துள்ளனர். மூன்று கிராமங்களில் நற்செய்தியின் பின்தொடர் பணி தடையின்றி நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோனால் பேன், பார்த்தி பேன், பஜ்ரிபேன் ஆகியோரை ஆலயம் செல்லவிடாமல் தடுக்கும் அவர்களது குடும்பத்தினர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; வயலிலிருந்து காய்கறிகளுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்த ராவ்ஜி பாயை ஒரு பாம்பு துரத்தியது. பாம்பிடமிருந்து தப்பி வீட்டிற்கு வந்த அவருக்கு அன்றிரவு அந்த பாம்பு அவரது படுக்கையின் அருகே இருப்பதைக் கண்டு மிகவும் பயந்து போயுள்ளார். பிசாசின் தந்திரங்களிலிருந்து ராவ்ஜி பாய் விடுவிக்கப்பட்டு தேவனுக்கு சாட்சியாய் வாழ; விபத்தினால் தலையில் காயம் ஏற்பட்டுள்ள அஸ்வின் பாய் விரைவில் பூரண சுகம்பெற ஜெபிப்போம்.

## *அவர் நாமம் அதிசயமானவர்!*

*பஞ்சாப் மாநிலம், புத்லாடா மாவட்டத்திலுள்ள அஹ்மத்கட் மண்டி பணித்தளத்திலுள்ள திரு. அலோக் என்பவருக்கு பிறவியிலே மூளைக்குச் செல்லும் நரம்பில் ஏற்பட்ட அடைப்பினால் பேசவோ, நேராக நடக்கவோ அல்லது எதையும் புரிந்துக்கொள்ளவோ முடியாத நிலையில் இருந்து வந்தார். மருத்துவர்களும் அவரை குணப்படுத்த முடியாது என்று கைவிட்டுவிட்டனர். ஆனால் அவரின் பெற்றோர் இயேசுவின் மீது அதிக நம்பிக்கையுடையவர்களாக ஜெபித்து வந்தனர். தேவன் அவர்களின் விண்ணப்பத்தை கேட்டு, விசுவாசத்தை கனம்பண்ணும்படியாக அவருக்கு சுகம் கொடுத்ததினிமித்தம் இப்பொழுது அவரால் நேராக நடக்க முடிகிறது. பிறர் பேசுவதையும் புரிந்துக்கொள்ள முடிகிறது. கிட்டதட்ட 50% சுகம் தந்தருளின தேவனுக்கு நன்றி செலுத்தி, இன்னும் முழுமையாக சுகம் பெற ஜெபிப்போம்.*

## 23 செப்டம்பர் திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேனியல் விஜயராஜ்
திருமதி. லூர்து மேரி கிரி பாபு
திருமதி. ஜாஸ்மின் கவிதா டென்சிங்

### விஜயநகர்
### விஜயகுமார் கே. & சுஷீலா

**துதிக்க:** இந்தாண்டில் இதுவரை 66 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் இணைந்தனர். 20 ஆண்டுகளாக நற்செய்தி அறிவித்து வரும் கடினமான பகுதியான சிக்காரி கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கு தேவன் கிருபை பாராட்டினார். மூன்று வருடங்களாக பிசாசின் கட்டுகளினால் சாப்பிடவும், தூங்கவும் முடியாமல் கஷ்டப்பட்டு வந்த அம்ரீத் பாய் விசுவாசிகளின் ஒருமனப்பட்ட ஜெபத்தினால் பரிபூரண விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கட்டப்பட்டு வரும் சிக்காரி கிராம ஆலயம் எவ்வித இடையூறுமின்றி கட்டப்பட்டு, தேவ நாமத்திற்கு மகிமையாக பிரதிஷ்டைபண்ணப்பட; நற்செய்திப் பணிக்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வரும் சோம் கிராமத்தின் ஹின்ட்லால் மற்றும் பத்ரிலால் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; ஊழியர்கள் மற்றும் ஊழியத்திற்கு எதிராக மக்களை திருப்ப முயற்சித்து வரும் பும்டி கிராமத்தின் கமலேஷ் இயேசுவின் அன்பினால் தொடப்பட; ஐந்தாண்டுகளாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டுள்ள கோகிலா பேன் விடுதலை பெற; விசுவாசி சுர்ஜா வீட்டில் ஏற்பட்ட மரணத்தினால் மோக்ரா கிராமத்தில் ஊழியத்திற்கு ஏற்பட்டுள்ள தடைகள் நீங்க ஜெபிப்போம்.

### நஸ்வாடி: ஹென்றி சாலமோன் & ஏஞ்சல் ஜெபா

**துதிக்க:** விவசாயப் பயன்பாட்டிற்கு என்று தண்ணீரில் கலந்து வைத்த பூச்சு மருந்தை தவறுதலாக குடித்த டுங்லா சபை விசுவாசி தன்ஜிபாயின் மகள் ஊர்மிளா மரணத்திலிருந்து தேவனால் பாதுகாக்கப்பட்டாள். ஜடோலி கிராமத்தில் புதிதாக பெண்கள் ஜெபக்குழு துவங்கப்பட்டுள்ளது. விடுதிக் கட்டுவதற்கான நிலத்தின் ஆரம்ப சர்வே எடுக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு ஆர்வம் காட்டிவரும் சுக்லிபேன் மற்றும் சந்தியாபாயின் குடும்பங்கள் விரைவில் கர்த்தரே தெய்வமென்று அறிக்கையிட; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சரோடி கிராமத்தின் சுமன் பரிபூரண சுகம்பெற; இப்பகுதியில் வசிக்கும் தாட்வி இன மக்கள் மத்தியில் தேவன் மாபெரும் எழுப்புதலைக் கட்டளையிட; நடைபெறவுள்ள அனைத்துக் கூடுகைகளும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

### பாதுகாத்த ஜெபம்

*ஹரியானா மாநிலம், ரத்தியா பணித்தளத்தின் எம்.பி. சட்டர் பகுதியிலுள்ள நமது சபை மூப்பர் ஜெகதீஸ் கௌர், அவரது சகோதரியுடன் மத்தியான வேளையில் வீட்டிற்குள் ஜெபித்துக் கொண்டிருந்தபோது சடசடவென சத்தத்துடன் திடீரென வீட்டின் பக்கவாட்டு சுவர் இடிந்துவிழ ஆரம்பித்தது. உடனடியாக பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டார்கள். அனைவரும் வீட்டைவிட்டு வெளியே வந்ததுதான் தாமதம் வீடு முற்றிலும் இடிந்து சேதமாகிவிட்டது. ஒருவேளை இரவிலே வீடு இடிந்து விழுந்திருந்தால் நிறைய உயிர்சேதம் ஆகியிருக்கும். ஆனால் கர்த்தர் அப்படி ஏதும் நடக்காமல் தம் பிள்ளைகளை பாதுகாத்துக் கொண்டார்.*

## 24 செப்டம்பர் செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. நிர்மலா மித்ரன்
திருமதி. சாந்தி லால் கிரிஷான் குமார்

### செலம்பா

### யுவனேஷ் & ஜான்சி ராணி

**துதிக்க:** சாவேனி கிராமத்தைச் சேர்ந்த ரவிதாஸ் என்பவரின் இரண்டு சிறுநீரகங்கள் பழுதடைந்து சிறுநீர் இரத்தமாக சென்ற நிலையில் சுகம் வேண்டி பல மருத்துவனைகளுக்குச் சென்றும், பூஜைகள் செய்தும் சுகம் கிடைக்காத நிலையில் இறுதியாக ஆலயம் வந்து விசுவாசிகளுடன் இணைந்து ஜெபித்த போது அற்புத சுகத்தை தேவன் அருளினார். வயலில் வேலைச் செய்து கொண்டிருந்தபோது சீறி வந்த பாம்பிடமிருந்து ஈஸ்வர்பாய் கர்த்தரால் தப்புவிக்கப்பட்டார். இப்பகுதிகளில் தேவன் நல்ல மழையைக் கட்டளையிட்டுள்ளார். புதிதாக 110 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டு, 8 பேர் புதிய ஏற்பாடும், 7 பேர் முழு வேதாகமமும் வாங்கிச் செல்ல கர்த்தர் கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியம் செய்ய அர்ப்பணித்துள்ள ஆஷிஷ் மற்றும் திலிப்-ஐ தேவன் பயன்படுத்த; சூலி திருச்சபையில் விசுவாசிகளின் மத்தியில் பிரிவினையை உண்டுபண்ணும் பிசாசின் தந்திரங்கள் முறியடிக்கப்பட; ஒவ்லான் மற்றும் கோலிவாடா கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; விசுவாசிகளின் நிலங்களில் நல்ல அறுவடையை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

### கவாண்ட்

### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** 26 பேர் கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாகயுள்ளனர். 10 குடும்பங்கள் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். சைனாபேன், நவ்ஜிபாய் ஆகியோர் அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவனால் விடுவிக்கப்பட்டனர். ஜெபத்திற்குப் பின் சாந்திபேன் தெளிவான கண் பார்வையைப் பெற்றாள். இனம்புரியா நோயினால் படுத்தபடுக்கையாக இருந்த சூரஜ்-க்காக விசுவாசிகள் கூடி ஜெபித்த போது அவருக்கு பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிராமத்தினரின் எதிர்ப்பினால் கிறிஸ்துவை விட்டு பின்வாங்கிப்போன 13 குடும்பங்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; கடந்த 9 மாதங்களாக வயிற்றுப்போக்கினால் கஷ்டப்படுகிற ரம்தியாபாய் பூரண சுகமடைய; ரெலியாம்மா கிராமத்தில் நடத்தவிருக்கும் வாலிபர் முகாம் மற்றும் பெண்கள் சிறப்புக் கூடுகை ஆசீர்வாதமாய் நடைபெற; ஞாயிறுப் பள்ளி நடத்த அர்ப்பணமுள்ள ஆசிரியர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

### விசுவாச ஜெபம் கால்நடையை காத்தது

*ஹிமாச்சலப் பிரதேசம், ரோஹ்ரு பணித் தளத்தில் சீர்சிங்-குப்ஜா தம்பதியினர் ஒரு பால் கொடுக்கும் மாட்டை வைத்து பிழைப்பு நடத்தி வருகின்றனர். தினமும் பக்கத்திலிருக்கும் மைதானத்தில் சென்று புல் மேய்ந்துவிட்டு திரும்பி வரும் மாடு, ஒருநாள் புல் மேய்ந்துவிட்டு தொழுவத்திற்கு வந்த போது கீழே படுத்துவிட்டது. சீர்சிங் வந்து எழுப்ப முயற்சி செய்தபோது அதனால் எழும்ப முடியவில்லை. அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்ற நிலையில் சீர்சிங் தம்பதியினர் ஜெபித்து தண்ணீரை மாடு மீது தெளித்தனர். சிறிது நேரத்தில் மாடு எழுந்து நின்றதுடன் புல் சாப்பிடவும் ஆரம்பித்தது. சீர்சிங் சபையில் சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத்தினார்.*

*உபவாச ஜெபநாள்*

**25 செப்டம்பர்**
**புதன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஆல்பர்ட் பிரபாகரன் N.

## தாத்ரா & நகர் ஹவேலி

### கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

**துதிக்க:** சிஸ்தா கிராமத்தின் யஷ்வந்த் பாய் – தொண்டையில் ஏற்பட்ட பிரச்சனையிலிருந்தும், அன்வீர் கிராமத்தின் நவசுபாய் – கால் வீக்கம் மற்றும் எரிச்சலிலிருந்தும், சுரங்கி கிராமத்தின் தினேஷ்பாய் – சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். சிக்கல்தா கிராமத்தின் சோனியாபாயின் தொடர் ஜெபத்தினால் நீண்ட நாட்களாக நடக்கமுடியாமலிருந்த அவரது மாடு எழுந்து நடக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுகுடல் வீக்கத்தினால் அவதியுறும் வாசுனா கிராமத்தின் திலீப் பாய், பூச்சிக் கடியினால் முகம் வீங்கி, கண் சிவந்து காணப்படும் கின்னோலி கிராமத்தின் சுமன், மாதவிடாய் பிரச்சனையினால் அநேக ஆண்டுகளாக கஷ்டப்பட்டுவரும் பார்சி கிராமத்தின் தக்ஷனா பேன், தோல் ஒவ்வாமையினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிஸ்தா கிராமத்தின் ரோனக் ஆகியோர் விரைவில் பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### சோப்டா: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** காந்திலி கிராமத்தில் புதிய ஜெபக்குழு ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். ஆம்பநேர் மற்றும் ராம்பூர் கிராமங்களில் நடைபெற்று வந்த ஜெபக் குழுக்கள் ஞாயிறு ஆராதனைகளாக மாற தேவன் கிருபை செய்துள்ளார். மகா தேவ் கிராமத்தில் ஒரு குடும்பம் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். விடுதியிலிருந்து வெளியே ஓடிச்சென்ற கிரண் என்கிற சிறுவனை நெடுஞ்சாலையில் வேகமாக வந்த டிரக் விபத்திலிருந்து அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு வருடங்களாக பிசாசின் பிடியினால் தாக்கப்பட்டுள்ள சுரேஷ்பாய் விடுதலை பெற; ராம்தாஜ் காச நோயிலிருந்தும், பிந்துபாய் மனநலப் பாதிப்பிலிருந்தும் தேவனால் சுகம்பெற; கால்சியம் குறைப்பாட்டினால் நடக்க முடியாமலிருக்கும் ரோஹித் என்பவருக்கு தேவன் அற்புத சுகம் தர ஜெபிப்போம்.

### தலாசரி: கெடாம் ஸ்ரீனிவாசராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** சன்டோரி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி ஆர்த்தி சோனா திடீரென மயங்கி விழுந்த நிலையில் அவரை மருத்துவ மனைக்கு கொண்டுச் சென்றனர். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் மூளை நரம்பு வெடித்துள்ளது, அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தினர். ஆனால் விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினால் அறுவை சிகிச்சையின்றி சுகம் பெற்று வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார். மிஷனெரியின் மகள் தெரேசாவுக்கு பி.எஸ்.சி. செவிலியர் (இருதய சிகிச்சை) படிக்க சி.எம்.சி. வேலூரில் இடம் கிடைக்க தேவன் உதவி செய்தார். ராம்பூர், கடோத்ரா, கான்டடரா சபைகளில் நடைபெற்ற விசுவாசிகளுக்கான முகாம் ஆசீர்வாதமாக அமைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இருதய நோயினால் அவதியுறும் 6 வயது அருசி தினேஷ்க்கு தேவன் பரிபூரண சுகமருள; விசுவாசத்தில் பின்வாங்கியுள்ள கன்ஜட், சால்னி கிராம சபைகள் மீண்டும் உயிர்மீட்சி பெற; நடைபெற்று வரும் பெண்கள் ஜெபக்குழுக்கள் தடையின்றி நடைபெற; சபை மூப்பர்களுக்கானப் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## 26 செப்டம்பர்

வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ரெபேக்காம்மா பால்

திரு. செய்கோதாங் ஜெள

### மோல்கி: பிட்யூத் குமார் சிங்

**துதிக்க:** 8 புதிய கிராமங்களில் சுமார் 2688 நபர்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளனர். 14 பேர் தேவன் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். 6 புதிய குடும்பங்கள் தேவனண்டை திரும்பியுள்ளனர். ரசிலாபாய்-க்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். லீலா பாயை பாம்புக் கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். பார்த்தி என்ற இரண்டு வயது குழந்தை ஜெபத்தினால் மூளைக் கட்டியிலிருந்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கஜர்கடி கிராமத்தில் நமது விசுவாசிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஜகங்கா என்பவர் மனந்திரும்ப; கை, கால் செயல்படாமலிருக்கும் 5 வயது ராகேஷ் குணமடைய; 25 நாட்களாக காய்ச்சலினால் கஷ்டப்படும் தீபிகா என்ற சிறுமிக்கு தேவன் சுகம் தர; மோல்கி, நர்மதா, வட்பாலி ஆகிய பணித்தளங்களில் விசுவாசிகளின் மத்தியில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிடவும், சுவிசேஷ ஊழியத்தில் விசுவாசிகள் பங்கு பெறவும் ஜெபிப்போம்.

### பால்: வெங்கடேஷ் வடார் & ஷீபா

**துதிக்க:** 2 புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதினால் 523 பேர் தேவனைக் குறித்து அறிந்து கொண்டனர். 7 பேர் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். 6 இடங்களில் பெண்களுக்கானப் பயிற்சியும், 13 இடங்களில் சபை மூப்பர்கள் பயிற்சியும் நடத்த தேவன் உதவி செய்தார். பாம்பு கடித்து இரத்த வாந்தி எடுத்த நம் விசுவாசியின் கணவர் சித்தாராம் ஜெபத்தினால் சுகம் பெற்றார். 8 நாட்களாக வாந்தி மற்றும் வயிற்று போக்கினால் கஷ்டப்பட்டு வந்த நமது விசுவாசி ரேகாவின் ஒருவயது மகள் உமித்து ஜெபத்தின் மூலம் குணமடைந்தாள். கெருமாஸ் கிராமத்தில் அசுத்தாவியின் பிடியினால் நடக்க இயலாமலிருந்த நிம்ம தேயாவுக்காக ஊழியர்கள் ஜெபித்த போது விடுதலை அருளி, நடக்கவும் கிருபை பாராட்டினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 11 வருடங்களாக குழந்தைக்காகக் காத்திருக்கும் சீமாவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; இரண்டு வருடங்களாக கால் வலியினால் அவதிப்படும் சுமன்பாய் சுகம்பெற; உடல் முழுவதும் சிரங்கினால் பாதிக்கப்பட்டுள்ள நான்கு மாத குழந்தை ராதாவுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; அநேக வருடங்களாக மனநலம் பாதிக்கப்பட்டிருக்கும் சுனிலை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## கர்நாடகா

### கோலார்: ஜோகன் மால்தோ

**துதிக்க:** பெண்கள் கூடுகை, வெளிப்புற சந்திப்பு ஊழியம் மற்றும் கைப்பிரதி ஊழியம் ஆகியவை சிறப்பாக நடைபெற்றன. விசுவாசி சாரதம்மாவின் அடக்க ஆராதனையில் கூடியிருந்தவர்களுக்கு நற்செய்தி அறிவிக்க தேவன் உதவி செய்தார். பலவிதமான பெலவீனங்களினால் படுக்கையிலிருந்த லக்ஷ்மி தேவி ஜெபத்தின் மூலம் நடந்து ஆராதனையில் பங்குபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சட்டரபள்ளி கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; பஞ்சராபலு, சிங்கநாக், அம்ராசல்லு கிராமங்களில் விரைவில் ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு தேவன் ஞானத்தையும், வழிநடத்துதலையும் அருள; புதிதாக ஊழியத்தில் இணைந்துள்ள மிஷனெரி சகோதரர் கன்னட மொழியை விரைவில் கற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## 27 செப்டம்பர் வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. கொலீன் ஹில்டா கிரேஸ்

### ஷிரஹட்டி

**ஆஷா பிராப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா**

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருச் சபையில் இணைந்தனர். நமது விசுவாசி சுனிதாவின் ஊக்கமான ஜெபத்தினால் விவாகரத்து கேட்டு வந்த அவரது கணவர் மனந்திரும்பி குடும்பத்துடன் சமாதானமாய் வாழ தேவன் கிருபை பாராட்டினார். அநேக ஆண்டுகளாக குழந்தையின்றி தவித்த விஜய லக்ஷ்மிக்கு ஜெபத்தின் மூலம் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தபால் துறையில் வேலை கிடைக்க வேண்டி ஜெபித்து வரும் கீதாவுக்கு தேவன் கிருபை செய்ய; தோல் வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள அபிமனேஷ்-க்கு தேவன் பூரண சுகம் தர; வறுமையில் கஷ்டப்பட்டு வரும் விசுவாசி எல்லம்மாவின் கணவர் குடிப் பழக்கத்தி லிருந்தும், மகன் வியாதியிலிருந்தும் விடுதலை பெறவும், குடும்பத்தின் வறுமை நீங்கி ஆசீர்வதிக்கப்படவும்; தன்னுடைய சகோதரனால் வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட விதவையான விசுவாசி ஜெமீலாவின் எதிர்காலம் ஆசீர்வதிக்கப்பட; மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ருக்மாவுக்கு தேவன் விடுதலை தர ஜெபிப்போம்.

### மாலூர்

**கிஷாந்தா லிமா & பிரமிளா சிங்**

**துதிக்க:** சந்தோஷ், இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்துள்ளார். நமது சபை மூப்பரும், ஊழியர்களின் ஆதரவாளருமான லோகேஷ் என்பவரது வயலில் 12 ஆண்டுகளில் கிடைக்காத விளைச்சலை இந்த ஆண்டு அறுவடை செய்ய தேவன் கிருபை செய்தார். வீடின்றி வெளியில் தங்கியிருந்த ஆலம்பாடி சபையைச் சேர்ந்த காவேரியம்மாளுக்கு சபை விசுவாசிகள் ஒன்றிணைந்து தங்கள் சொந்த செலவில் வாடகைக்கு வீடு எடுத்து அவரை தங்க வைத்துள்ளனர். நீண்ட நாட்கள் வேலைக்காக ஜெபித்து வந்த சகோதரி வேதாவுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கச் செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடன் பிரச்சனையினால் குடும்பத்தில் சமாதானமின்றி தவிக்கும் வெங்கடப்பாவின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட; பிசாசின் பிடியிலிருந்து சுவாதி விடுதலை பெற; ஆலயம் செல்வதை தடைசெய்யும் அம்பிகாவின் கணவர் இரட்சிக்கப்பட்டு குடும்பமாய் ஆலய ஆராதனையில் பங்குபெற; கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் தடையின்றி தேவனை அறிக்கையிட; ஆலயத்திற்கு வரும் விசுவாசிகளுக்கு காணப்படும் சமூக தடைகள் நீங்க ஜெபிப்போம்.

## 28 செப்டம்பர் சனி

# ஆந்திரப் பிரதேசம்

### கொத்தச்செருவு: தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** கொத்தசெருவு மற்றும் பிராமணப்பள்ளி பகுதிகளில் நற்செய்தி கைபிரதிகள் கொடுக்க தேவன் கிருபை செய்தார். பெண்ணகோட்டா பகுதியில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சபை மூப்பர்கள் பயிற்சி சிறப்பாக நடை பெற்றது. சென்ணப்பள்ளி, சென்னராஜ பள்ளி, எர்ரப்பள்ளி ஆகிய கிராமங்களில் பின்தொடர் பணி தடையின்றி நடை பெற்றது. தொடர் ஜெபத்தினால் முத்யாலம்மாவுக்கு ஏற்ற வேலை கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயத்திற்கு செல்வதைத் தடுக்கும் பிரபாவதி மற்றும் திருப்பதி ஆகியோரின் குடும்பத்தினர் தேவனால் தொடப்பட; சாய்நகரில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; பிறரால் அபகரிக்கப்பட்டுள்ள ஆஞ்சிநேயுலின் நிலம் அவருக்கு திரும்ப கிடைக்க; எதிர்ப்பினால் ஆலயம் வருவதை நிறுத்தியுள்ள அஞ்சப்பா மற்றும் நாராயணம்மா மீண்டும் ஆலயத்திற்கு வந்து கர்த்தரைத் தொழுது கொள்ள ஜெபிப்போம்.

### தாமலச்செருவு: ஜாண் டேவிட்ராஜ் (ஓய்வு) & ஞானசேகரி

**துதிக்க:** விசுவாசி பவித்ரா சாயின் பசுமாட்டின் வயிற்றிலிருந்தக் கன்றுக் குட்டி இறந்ததால் தாய் பசு வயிறு வீங்கி ஆபத்தான நிலையிலிருந்த போது பவித்ரா முழங்கால்படியிட்டு தேவனை நோக்கி விசுவாசத்துடன் ஜெபித்தார். ஜெபத்தைக் கேட்ட தேவன் தாய் பசுவை சுகத்துடன் பாதுகாத்தார். சரியான வெளிச்சமில்லாத வீட்டில் தனியாக வசித்து வந்த அன்னம் மாவின் வீட்டிற்குள் இருந்த பாம்பைக் கண்டுப் பிடித்துக் கொல்ல ஆண்டவர் உதவி செய்தார். ஆலயம் செல்ல தடைசெய்து வந்த தன் குடிகார கணவருக்காக திவ்யா ஜெபித்த போது தேவன் அவரது குடிப்பழக்கத்தை மாற்றி நல்லதொரு வேலையையும் அருளினார். எஸ்தரம்மா வின் நாக்கிலிருந்த புண் புற்று நோய் சம்பந்தப்பட்டதல்ல என்று மருத்துவர்கள் உறுதி செய்ய கிருபை பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்திற்கு உதவியாக தன்னார்வத் தொண்டர்களை தேவன் எழுப்பித் தர; மூளைக் கட்டி அறுவை சிகிச்சைக்குப் பின் ஒரு பக்க கை, கால் செயல்படாமலிருக்கும் ஸ்ரீகணேஷ் சுகம் பெற; மருமகள் பிரசவ சமயத்தில் இறந்ததால் விசுவாசத்தை விட்டு பின்வாங்கி போயுள்ள மெர்சி தானியேல் குடும்பத்தை தேவன் ஆறுதல்படுத்தி மீண்டும் ஆலயத்திற்கு வந்து தேவனை ஆராதிக்க; லாவண்யா, பவன் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் கட்டளையிட; பிசாசின் தொல்லையினால் அவதியுறும் சுமலதாவுக்கு தேவன் விடுதலை தர; நரம்புத் தளர்ச்சி மற்றும் தண்டுவட வலியிலிருந்து ஆபிரகாம் ஐயாவும், உடல் முழுவதும் புண்களால் அவதியுறும் நீலாவதியம்மாவும் சுகம்பெற; சிராவாணி மற்றும் ரெபேக்காவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.

## 29 செப்டம்பர்

ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. சுஷாஜிதா சேனாபதி

### பலமநேர்

**பால் குப்புசாமி & ஷைலா**

**துதிக்க:** கொலமாசனப்பள்ளி சபையில் வைத்து நடத்தப்பட்ட வாலிபர் முகாமில் 30 பேர் கலந்து கொண்டு தங்கள் வாழ்வை புதுப்பித்துக் கொண்டனர். அப்பினப்பள்ளி சபையிலிருந்து இரண்டு விசுவாசிகள் தங்கள் உதாரத்துவமான காணிக்கையினால் மிஷனெரிகளை தாங்க முன்வந்துள்ளனர். காலில் பெரியக் கட்டியினால் நடக்கமுடியாமல் கஷ்டப்பட்டு வந்த கண் பார்வையற்ற விசுவாசி எஸ்தரம்மாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் பரிபூரண சுகம்பெற்றார். அப்பினப்பள்ளி சபையில், டெங்கு காய்ச்சலினால் இரத்த அணுக்கள் குறைந்து மரணத்தருவாயிலிருந்த சந்தியா மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு ஜெபத்தினால் பரிபூரண சுகத்தைத் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை விட்டு பின் வாங்கியுள்ள மஞ்சு, சுப்பிரமணி, கங்கம்மா, ஆனந்த், வரலக்ஷ்மி ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; செங்கம்மாவின் நிலத்தை அபகரிக்க நினைப்பவர்களின் முயற்சிகளை தேவன் அதமாக்க; தள்ளப்பள்ளி கிராம மக்கள் மத்தியில் நமது ஊழியத்தைப் பற்றி தவறாக பேசி வரும் பாஸ்கர் ரெட்டி இருதயத்தில் தேவன் இடைப்பட; நடத்த விருக்கும் வாலிபர், பெண்கள், சபை மூப்பர் கூடுகைகள் தடையின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### மேச்சேரி

**தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி**

**துதிக்க:** 4 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. குழுவாகச் சென்று கைப்பிரதிகள் மற்றும் சுவிசேஷப் புத்தகங்கள் சுமார் 150 பேருக்கு விநியோகிக்க தேவன் கிருபை செய்தார். சாப்பிடவும், தூங்கவும் முடியாமல் கஷ்டப்பட்டு வந்த கண்ணையன் என்பவருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். பிசாசின் தொல்லையினால் பயம் மற்றும் சுகவீனத்தினால் பாதிக்கப்பட்டிருந்த தங்கம்மாள் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். மனபாரங்களினால் நிம்மதி யின்றி தவித்த லக்ஷ்மியின் குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தபின் அதிலிருந்து விடுதலைபெற்று சமாதானத்தோடு வாழ கர்த்தர் கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷப் பிரதிகளை பெற்றுக் கொண்டவர்கள் தேவனை விசுவாசிக்க; தேவன் மேல் விசுவாசம் வைத்துள்ள சீனிவாசன் & பிரியா தம்பதியினரை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; லக்ஷ்மியின் மகன் மூர்த்தி குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டு தேவனை ஏற்றுக்கொள்ள; மரியப்பன், முத்து லக்ஷ்மி, புஷ்பராஜ், தமிழன், தனலக்ஷ்மி, பழனிசாமி, முருகேசன், ஆண்டியப்பன் ஆகியோர் குடும்பத்தோடு தேவனை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள; சரண்யாவுக்கு ஏற்ற வேலையை தேவன் அருள; மணி இரட்சிக்கப்படவும், அவருக்கு ஏற்ற வாழ்க்கை துணை அமையவும் ஜெபிப்போம்.

## 30 செப்டம்பர் திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தும்பா சௌதுரி ஓம் பிரகாஷ்

## அஞ்செட்டி

**டேவிட் நிக்கல்சன் & ஐவி**

**துதிக்க:** 3 கிராமங்களில் பின்தொடர் பணி சிறப்பாக நடைபெற்றது. முழுஇரவு ஜெபத்தில் 11 பேர் கலந்து கொண்டனர். விசுவாசி கௌரம்மாவை வாகன விபத்திலிருந்து தேவன் பாதுகாத்தார். 5 புதிய தொடர்பாளர்களை தேவன் தந்துள்ளார். புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க திறந்த வாசலை தேவன் அருளினார். பலவிதமான நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்த நமது விசுவாசிகளுக்கு தேவன் சுகமருளினார். விவசாயத்திற்குத் தேவையான மழையை தேவன் கட்டளையிட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும் மாதத்தில் நடைபெறவிருக்கும் திரைப்பட ஊழியம், புதிய கிராம ஊழியம், முழு இரவு ஜெபம், பெண்கள் கூடுகை ஆகியவை தடையின்றி நடைபெற; உன்சனஹள்ளி, ஓதிபுரம், அர்த்தகல், பசபட்டணா, சாமண்டிபுரா ஆகிய கர்நாடகா எல்லைக் கிராமங்களிலும், இந்திராநகர், பயில்காடு, சிங்கோட்டை, மரியாளம், வண்ணத்துபட்டி ஆகிய தமிழ் கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் ரவி, அசோகன், செல்வகுமார், நாகராஜ், ரீகன், மாது, சுரேஷ்பாபு, அனுஷ், அப்பிதேவி, மூவேந்திரன் ஆகியோருக்கு தேவன் விடுதலை தர ஜெபிப்போம்.

## வார்லி மொழிபெயர்ப்புப்பணி

**ஆபிரகாம் ஜி. & ஹேமலதா**

**துதிக்க:** ஏசாயா புத்தகத்திலிருந்து 3 அதிகாரங்கள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. 2 சாமுவேல் புத்தகத்திலிருந்து 22 அதிகாரங்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. ஆதியாகமம் மற்றும் எஸ்தர் புத்தகங்களில் முக்கிய விதிமுறைகள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மத்தேயு, மாற்கு மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆகிய புத்தகங்களை தட்டச்சு செய்ய உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 2 சாமுவேல் மற்றும் ஏசாயா புத்தகங்கள் சரிபார்க்கப்பட; முக்கிய விதிமுறைகள் மற்றும் வேதாகமம் உபயோகிக்கும் சாதனங்கள் சரிபார்க்கப்பட; வேதாகம மொழி பெயர்ப்புக்குத் தேவையான ஞானம் மற்றும் ஊழியரின் சரீர சுகத்திற்காக ஜெபிப்போம்.

## *பலவீனரைத் தாங்குங்கள்*

*குஜராத் மாநிலம் டாங்ஸ் மாவட்டத்தின் சாக்கரபாத்தல் பணித்தளத்தில் கிறிஸ்துமஸ் பெரு விழா நடந்துகொண்டிருந்தது. திரளான விசுவாசிகளும் பிற கிராம ஜனங்களும் திரண்டிருந்து நிகழ்ச்சியினை கண்டுகளித்துக் கொண்டிருந்தனர். நிகழ்ச்சியின் நடுவே மேடையேறிய சாமுவேல் என்கிற விசுவாசி, ஒன்றுமில்லாத அவரை தேவன் எவ்வாறு உயர்த்தினார் என்று சாட்சி கூறி, இவ்வளவு நன்மை செய்த கர்த்தருக்கு நன்றி செலுத்தும் வண்ணம் அவருடைய அன்பினைப் பிறருக்கு காண்பிக்கும் பொருட்டு இந்தப் பகுதியிலுள்ள விதவைகள் அனைவருக்கும் சேலை மற்றும் போர்வை வழங்குகிறேன் என்று கூறி அதன்படி அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களில் வசிக்கும் ஆதரவற்ற விதவைகளுக்கு கிறிஸ்துமஸ் அன்பின் பரிசாக சேலை, போர்வை வழங்கினார். இதுவரை எந்த அரசியல் கட்சியினரோ, மத இயக்கமோ இப்படியொரு அன்பினைக் காண்பித்ததில்லை என்று சொல்லி ஊரார் அனைவரும் கிறிஸ்தவர்களின் செயலை மிகவும் பாராட்டினர். தேவ நாமம் மகிமைப்பட்டது.*

**398**

**மிஷனரி ஆல்பம்**

மிஷனெரி திரு. ஏ. செல்வராஜ் அவர்கள், ஸ்வாட்ஸ் ஐயர் கால் பதித்து ஊழியம் செய்து வந்த திருச்சிராப்பள்ளியில் கத்தோலிக்க பின்னனியத்தைச் சேர்ந்த திரு. அந்தோனிசாமி & திருமதி. மேரி ஆகியோருக்கு மகனாக 17.03.1979 அன்று பிறந்தார். அவரது குடும்பம் 1997-ல் இயேசு கிறிஸ்துவை தெய்வமாக ஏற்றுக்கொண்டனர். அவர் தனது பள்ளி படிப்பின் நாட்களிலே தேவ பணியில் உதவி செய்து வந்தாலும், நண்பர்களுடன் இணைந்து பாவ பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்தார். ஒரு நாள் ஒரு தேவ மனிதனின் செய்தி வேளையில் மத்.11:28-ம் வசனத்தின் மூலம் செல்வராஜுடன் தேவன் இடைப்பட்டார். அன்று அவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஆலயத்திற்கு தவறாமல் செல்லவும், வேதத்திற்கு கீழ்ப்படிந்து வாழவும் துவங்கினார். பின்பு தனது சபை போதகருடன் இணைந்து ஊழியம் செய்து வந்தார். அந்நாட்களில் தன் நண்பர்கள் மூலம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களை பற்றி அறிந்துகொண்டார். இந்த இயக்கத்தோடு இணைந்து ஊழியம் செய்ய ஒரு அழைப்பு அவரை நோக்கிச் சென்றது. 2003-ம் ஆண்டு முதல் நமது மூத்த ஊழியர் திரு. நவநீதர் அண்ணனோடு சுவிசேஷ இரதத்தில் தன்னார்வலராக இணைந்து தேவ ஊழியத்தை நிறைவேற்றும் வாய்ப்பு கிடைத்தது. நான்கு வருடங்களாக சுவிசேஷ இரதம் மூலம் வட இந்தியாவின் பல மாநிலங்களில் ஊழியம் செய்து வந்ததினால் அதிக ஆத்தும பாரத்தைப் பெற்றுக்கொண்டார். பின்பு ஆவியானவரின் உந்துதலின்படி 13.06.2007 அன்று முழு நேர ஊழியராய் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்தார். ஊழிய பயிற்சிக்குப் பின் இராஜஸ்தான் மாநிலத்தின் வெவ்வேறு பணித்தளங்களில் ஊழியம் செய்து வந்தார்.

மிஷனெரி சகோதரி செல்வம்மாள் நெய்வேலியைச் சேர்ந்த திரு. தங்கராஜ் & திருமதி. லைலாமேரி அவர்களுக்கு மூத்த மகளாக 09.06.1987 அன்று பிறந்தார். சகோதரி செல்வம்மாள் ஆசிரியர் பயிற்சி படித்துக் கொண்டிருக்கும் போது தனது சபையில் நடந்த ஒரு கூடுகையில் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். அதன் பின் நமது கௌரவ முன்னேற்றப்பணி செயலர் திரு. சேகர் மோரிஸ் அண்ணனோடு இணைந்து ஒரு வருடம் முன்னேற்றப் பணி ஊழியத்தில் உதவி செய்து வந்தார். 11.06.2008 அன்று நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழுநேர ஊழியராக இணைந்தார். ஊழிய பயிற்சிக்குப் பின் குஜராத்திலுள்ள செலம்பா பணித்தளத்தில் பணியாற்றினார். 14.12.2009-ம் தேதி திரு. ஏ. செல்வராஜ் அவர்களுடன் திருமணத்தில் இணைக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து இராஜஸ்தானிலுள்ள பீலிபங்கன் பணித்தளத்தில் குடும்பமாக ஊழியம் செய்து வந்தனர். தற்போது இவர்கள் இராஜஸ்தானிலுள்ள கைர்த்தல் பணித்தளத்தில் தேவ ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார்கள்.

தேவன் இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகளை தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகன் செருபா மெல்பின்ராஜ் (25.12.2010) 9-ம் வகுப்பும், இளைய மகன் ஸ்மித் மார்ட்டின் ராஜ் (23.01.2014) 6-ம் வகுப்பும் டோனாவூரில் உள்ள சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இம்மிஷனெரி குடும்பத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம்.



**திரு. ஏ. செல்வராஜ் & திருமதி. செல்வம்மாள்**

Regd. Newspaper for India No.17759/69

# ஆட்கள் தேவை!

**நீங்கள்**

- மறுபிறப்பின் அனுபவம் பெற்றுள்ளீர்களா?
- சுவிசேஷ ஊழியம் செய்ய அழைப்பு உள்ளவரா?
- இந்தியாவின் எந்தப் பகுதியிலும் சுவிசேஷ ஊழியம் செய்யத் தயாராக இருப்பவரா?
- நல்ல உடல் நலம் கொண்டவரா?
- ஆண்களானால் 28 வயதிற்கு குறைவாகவும், பெண்களானால் 24 வயதிற்கு குறைவாகவும் இருப்பவரா?
- குறைந்த பட்ச கல்வித் தகுதியாக 12-ம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவரா?

பட்டதாரி / முதுநிலை பட்டதாரி / ஆசிரியர் / மருத்துவர் / தாதியர் / மருந்தாளுனர் / எக்ஸ்ரே / ஸ்கேன் டெக்னீஷியன் / பொறியாளர் / கணினி வடிவமைப்பாளர் ஆகியோரும் விண்ணப்பிக்கலாம்.

*தொடர்புக்கு:*

செயலர், மனிதவள மேம்பாட்டுத்துறை,
FMPB, 29, உயர் நிலைப் பள்ளி சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 053.

**Ph: 8073130527 / Email. jebarajsamuel@fmpb.org / hrd@fmpb.org**

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***